தேசிய ஓய்வுச் சம்பள திட்டத்துக்கு வடபகுதியில் விரிவான பிரசாரம்

Registered as a News peper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்: 112
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 21 ரபி;அவ் 17 செவ்வாய்க்கிழமை [3-6-69]

ஈழநாடு
சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம்
— ரூ. 18-00
ஆறு மாதம்
— ரூ. 34-00
ஒரு வருடம்
— ரூ. 66-00

ஈழநாடு
சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம்
— ரூ. 4-00
ஆறு மாதம்
— ரூ. 7-50
ஒரு வருடம்
— ரூ. 14-00
முற்பணம்
கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம்
அனுப்பப்படும்.

நிரந்தர வருமானமில்லாதவர் பயனடையலாம்

கொழும்பு, ஞாயிறு

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட தேசிய ஓய்வுச் சம்பளத்திட்டத்தை வடபகுதியிலும் விரிவாகப் பிரசாரம் செய்வதற்கென கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் இவ்வார இறுதிக்குள் வடக்கு மாகாணச் சுற்றுப் பிரயாணத்தை மேற்கொள்ளவிருக்கிறார்.

கண்டி மாகாணத்திற்கும், தென்மாகாணத்திற்கும் இருவேறு உத்தியோகத்தர்கள் அனுப்பப்படுகின்றனர்.

இந்த மூன்று உத்தியோகத்தர்களும், கல்விப்பகுதியிலுள்ள காப்புறுதிக் கூட்டுத்தாபனகிளைமுகாமையாளர்களுடன் சென்று, அரசாங்க அதிபர்கள். பல்வேறு அரசாங்க திணைக்கள அதிபர்கள். சமூக அபிவிருத்திச் சங்கத் தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்து, காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தேசிய ஓய்வு சம்பளத்திட்டத்தின் அடிப்படை அம்சங்களை விளக்கிக் கூறுவர்.

காப்புறுதித் திட்டங்களின் கீழ் எல்லாம் ஒருவர் தனது ஓய்வுக் காலத்தில் எதாவது பலன் பெறவேண்டுமானால், ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு பத்து வருடமோ, பதினைந்து வருடமோ தொடர்த்து பணம் கட்டி வரவேண்டும். சில வருடங்கள் மட்டும் கட்டிவிட்டு, அப்புறம் தொடர்ந்து பணம் கட்டாமல் விட்டால் காப்புறுதித் திட்டத்தின் கீழான முழுப்பயனையும் பெற முடியாது.

இந்தக் காரணத்தால் அரசாங்க ஊழியர்களைப் போல், அல்லது தனியார் துறை ஊழியர்களைப் போல்' நிரந்தர வருமானமில்லாதவர்கள் காப்புறுதி திட்டங்களின் போதிய பலனடைய முடியாதிருந்தது.

இந்த நிலையைப் போக்கவும், மக்களின் சேமிப்பை ஒன்று திரட்டி நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்தவுமே இந்தத் ''தேசிய ஓய்வுச் சம்பளத் திட்டம்'' உருவாக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ், நிரந்தர வருமானமில்லாதவர்களும்சொந்தத் தொழில்களில் ஈடுபட்டிருப்போரும் பணவசதி ஏற்படும் காலத்தில் ஒரு தொகையை தேசிய ஓய்வுச் சம்பளத் திட்டத்தின்கீழ் கட்டிவிட்டு அதன் பின் தொடர்ந்து கட்டாமல் விட்டாலும் 55 வயதை அடைந்த பின்னர் இந்தத் திட்டத்தின்கீழ் பலன் பெறுவர்.

மீனவர்கள், விவசாயிகள், கைத்தொழில்களில் ஈடுபட்டிருப்போர் போன்றோரின் நலனுக்காகவும், சேமலாப நிதி வசதிகிடைக்காத சில தொழிலாளர்களுக்காகவுமே இந்தத் 'தேசிய ஓய்வுச் சம்பளத்திட்டம் அமுல் நடத்தப்படுகிறது.

நிவாரணப் பணம் தவறிவிட்டது

யாழ்ப்பாணம் திங்கள்

புற்றுநோய் நிவாரணப் பணம் ரூபா 540 நேற்று மாலை 5 மணியளவில் தவறி விடப்பட்டுவிட்டது. இதனை கண்டெடுப்பவர் நிவாரண சங்கத்தின் தலைவர் டாக்டர் கே. கனகரத்தினம் தம்மிடம் ஒப்படைக்கும்படி கோரியுள்ளார். இல 1 மணத்தறை ஒழுங்கை கந்தர்மடம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கும்படி கோரப்பட்டுள்ளது.

தமிழர் குறைகளை ஆராய மீண்டும் சர்வ கட்சி மாநாடு

அரசியல் சார்பற்றவர் கூட்டுவதற்கு முயற்சி

யாழ்ப்பாணம்,, செவ்.

வடபகுதி பௌத்தபாடசாலைகளின்போதனா மொழி சம்பந்தமாகஅடுத்து என்ன நடவடிக்கை எடுப்பதென்பதுபற்றி ஆராய்வதற்காக தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளரும் வட்டுக்கோட்டைப் பிரதிநிதியுமான திரு. அமிர்தலிங்கம் கூட்டியசர்வகட்சி மகாநாட்டில் அரசியல் கட்சிகள் பல கலந்துகொள்ளாததன் காரணமாக தமிழ் மக்களை எதிர்நோக்கியுள்ள பல பிரச்னைகளுக்கும் நல்லதொரு தீர்வுகாண்பதற்கும் தமிழ் மக்களின் குறைகளையும் கோரிக்கைகளையும் ஒரே குரலில் அரசாங்கத்துக்கு எடுத்துக்ச்சொல்வதற்கும் அரசியல்' கட்சி எதையும் சேராத சில தமிழ்ப் பிரமுகர்கள் சிலர் சர்வகட்சி மகாநாடு ஒன்றைக் கூட்டுவதற்கு புதிய முயற்சியொன்றை மேறகொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் என்ற முறையிலும் ஒரு தொகுதியின் பிரதிநிதி என்ற முறையிலும் திரு. அமிர்தலிங்கம் 'சர்வகட்சி' மகாநாடு ஒன்றைக் கூட்டியது

யினர் இப்போது 'சர்வ கட்சி மகாநாடு' கூட்டமுன் வந்ததால் அரசியல் சார்பற்றவர்கள் இனித்துணிந்து சர்வகட்சி மகாநாட்டைக் கூட்டலாமென்றும் இதில் சகலரும் கலந்துகொள்ள முடியு

மகாநாட்டை நான் கூட்டியபடியால்தான் சிலகட்சித் தலைவர்கள் வரவில்லைப் போலிருக்கிறது. யார்மகாநாட்டைக் கூட்டினாலும் நாங்கள் கலந்து கொள்ளத்தயாராக இருக்கிறோம்'' என்று கூறி

17 றாத்தல் குரங்கு விண்வெளி செல்லும்

வாஷிங்டன், ஜூன்.1

விண்வெளி ஆராய்ச்சியில் மேலும் பல புதிய தகவல்களைச் சேகரிப்பதற்காக அமெரிக்கா 17 றாத்தல் எடையுள்ள குரங்கை விண்வெளிக்கு அனுப்பி வைக்கவிருக்கிறது.

இம்மாதம் 18-ம் திகதி இக் குரங்கு விண்வெளிப் பயணத்தை மேற்கொள்ளவிருக்கிறது. 30 நாட்கள் வரை விண்வெளிப் பயணம் நீடிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மன உடல்நிலை விளைவுகளை அறியஇது உதவுமென அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பெலியத்த கொலை வழக்கில் எதிரிக்கு மரணதண்டனை

காலி, ஞாயிறு

பெலியத்தை கொலைவழக்கில் எதிரிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. ஜூரிசபையினர் தனிமையில் கூடி மந்திராலோசனைசெய்த பின் எதிரி குற்றவாளி

ஜூலை 15 ம் தேதி எம். ஏ. லலிதா என்ற 6 வயது சிறுமியை கொலை செய்ததாக டபிள்யூ.பி. பியதாசா மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

முடிக்குரிய தரப்பில அட்



காலி, ஞாயிறு

பெலியத்தை கொலைவழக்கில் எதிரிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. ஜூரிசபையினர் தனிமையில் கூடிமந்திராலோசனைசெய்த பின் எதிரி குற்றவாளியென ஏகமனதாக தீர்ப்பளித்தனர்.

இவ்வழக்கு காலி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் ஓ.எல்.டி. கிரெஸ்டர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 67ம் ஆண்டு ஜூலை 15 ம் தேதி எம். ஏ. லலிதா என்ற 6 வயது சிறுமியை கொலை செய்ததாக டபிள்யூ.பி. பியதாசா மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

முடிக்குரிய தரப்பில அட்வகேட் சுனில டி. சிலவா ஆஜரானார். எதிரிக்காக அட்வகேட் குனிஸ்கா டி. சொய்சா ஆஜரானார். வழக்கறிஞர் ஜே.ஜி.கருணதாசா எதிரிக்காக அரசாங்கத்தால நியமிக்கப்பட்டிருந்தார்.

ன்றை மேறகொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் என்ற முறையிலும் ஒரு தொகுதியின் பிரதிநிதி என்ற முறையிலும் திரு. அமிர்தலிங்கம் 'சர்வகட்சி' மகாநாடு ஒன்றைக் கூட்டியது தான் இதர அரசியல் கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளாமல் விட்டதற்குக் காரணம் என்பதுடன் இப்படியொருமகாநாடு கூட்டுவது பற்றி எந்த அரசியல் கட்சியுடனும் கலந்தாலோசனை செய்யாததும் ஒரு காரணமெனக் கூறப்படுகிறது இதுதவிர இதுவரை எந்தப் பிரச்னைக்கும் 'சர்வ கட்சி' மகாநாடு ஒன்றைக் கூட்டி ஆலோசனை செய்யாத தமிழரசுக் கட்சியினர் இப்போது 'சர்வ கட்சி மகாநாடு' கூட்டமுன் வந்ததால் அரசியல் சார்பற்றவர்கள் இனித்துணிந்து சர்வகட்சி மகாநாடு கூட்டலாமென்றும் இதில் சகலரும் கலந்துகொள்ள முடியுமென்றும் எதிர்பார்ப்பதாகவும் சிலவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தாம் கூட்டியமகாநாட்டிலேயே திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் ''இந்த மகாநாட்டை நான் கூட்டியபடியால்தான் சிலகட்சித் தலைவர்கள் வரவில்லைப் போலிருக்கிறது. யார்மகாநாடு கூட்டினாலும் நாங்கள் கலந்து கொள்ளத்தயாராக இருக்கிறோம்'' என்று கூறியதையும் அதேவட்டாரங்கள் சுட்டிக்காட்டி விரைவில் மற்றொரு சர்வகட்சிமாநாடு நடைபெறுமெனத் தெரிவித்தன.

ஜாதிக சம்பத ஒரு ரூபாய் சுவீப்டிக்கட் விற்பனை ஆரம்பவிழாவில் கலந்துகொள்ளும்படி தேசியலொத்தர்சபையினர்விடுத்த வேண்டுகோளுக்கிணங்கி டேவிட் பிரௌன் ஸ்தாபனத்தால் நான்கு டிராக்டர்களையும் அதன் இணைப்பு வண்டி, மற்றும் சாதனங்களையும் காட்சியில் சேர்த்தனர். கொழும்பு நகர மண்டபத்துக்குச் சமீபத்தில் அந்த டிராக்டர்களுடன், பிரிட்டிஷ் டேவிட் பிரௌன் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த திரு. ஸ்டீவ்கிரேவனும் மற்றும் உத்தியோகத்தர்களும் நிற்பதை இப்படத்தில் காணலாம்.

சாவகச்சேரி நகரசபை தலையிடுவதற்கு ஆட்சேபம்

யாழ்ப்பாணம், திங்கள்

மட்டுவில் மின்சாரத்திட்டத்தில் சாவகச்சேரி நகரசபை தலையிடுவதை ஆட்சேபித்துசாவகச்சேரி கிராமசபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

மட்டுவில் மின்சாரத்திட்டம் பற்றி சாவகச்சேரி நகரசபையின் விசேஷ கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானம் சார்பாக, இச்சபை ஆராய்ந்தபோது மட்டுவில கிராமம் சாவகச்சேரி கிராமசபைக்குட்பட்ட கிராமமாக இருப்பதால சாவகச்சேரி நகரசபை தலையிடுவதுமுறையலலவென சபையில கூறப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ்உள்ள மின்தொடர்வைரவர்கோவிலடி பன்றித்தலைச்சி அம்மன் கோவிலடி றேட்டால் போடப்பட வேண்டுமென்று இச்சபை இருதீர்மானங்களை நிறைவேற்றி மேலதிகாரிகளுக்கு அனுப்பிவைத்திருப்பதாகவும் சபையில தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்ட பிரேரணையை திரு. த. கனகரத்தினம், பிரேரித்தார். திரு. சி. சின்னத்துரை இதனை ஆமோதித்தார்.

விளையாடும் இடம்மாற்றம்

இம்மாதம் 4-ம் 5-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருந்த ஈழநாடு' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி, சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளதை சகல விளையாட்டுக்கழகங்களுக்கும் அறியத்தருகின்றோம்.

◆ ◆ ◆

சுன்னாகம் மயானத்தில் கிடந்த சடலம்

மண்டைதீவு வாலிபனா?; அடையாளம் காணமுயற்சி

யாழ்ப்பாணம், செவ்.

சுன்னாகம் மயானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை கண்டுபிடிக்கப்பட்ட சடலம். மண்டைதீவைச் சேர்ந்த வாலிபருடையதாகவிருக்கலாம் என பொலிஸார் சேகரித்துள்ள கடைசித் தகவல்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

இச் சடலம் கண்டு பிடிக்கப்பட்டு ஒரு வார காலமாகியும் கூட சடலம் அடையாளம் காணப்படாததோடு, சந்தேக நபர்களும் கைதுசெய்யப்படவில்லை.

கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ள சடலத்தின் தலையை 'பிளாஸ்டிக்' பரிசோதனையின் பின் ஒளிப்பதிவு செய்வதன் மூலம் சடலத்தின் முகத்தைச் சுலபமாக அடையாளம் காணலாமென பொலிசார் எதிர்பார்க்கின்றனர்.

மண்டதீவைச் சேர்ந்த ஒரு சிலர் பொலிஸ் சுப்பிரின்டனிடம் செய்துள்ள புகாரில் 24-ம் திகதி வீட்டுக்கு வந்த தங்கள் மகன் பின்னர் வீட்டுக்கு வரவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண நகரிலுள்ள ஒரு வர்த்தகர் எந்த நேரமும் பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்படலாம் எனத் தெரிகின்றது. (கா. நி.

ஈழநாடு 10- வது ஆண்டு நிறைவுவிழா

ஈழநாடு' வெற்றிக் கிண்ணத்திற்கான

நொக்-அவுட் போட்டி - யூன் 1969

மேற்படி போட்டிகள் இம்மாதம் 4-ம் திகதி ஆரம்பமாகிறது. போட்டி விபரங்கள் வருமாறு.

	திகதி	நேரம்	கழகம்	போட்டி நடைபெறும் மைதானம்
''A''	4-6-69	பி. ப. 3-45	யுத்கவுன்சில் vs. குருநகர் யுனைட்டட்	சென். பற்றிக்ஸ்
''B''	,,	பி. ப. 5-00	வதிரி டயமண்ட்ஸ் vs. கிருஸ்கோப்பர்ஸ்	,,
''C''	,,	பி. ப. 3-45	வைக்கின்ஸ் vs. சென். அன்ரனீஸ்	கோட்டை
''D '	,,	பி. ப. 5-00	சென். யேம்ஸ் vs. மயிலிட்டி புளூஸ்	,,
''E''	5-6-69	பி. ப. 3-45	கிறீன் பீல்ட் vs. சென். மேரிஸ்	சென். பற்றிக்ஸ்
''F''	,,	பி. ப. 5-00	வல்வை யுனைட்டட் vs. கடற்படை	,,
''G''	,,	பி. ப. 3-45	சென். யோசப் vs, பாடும் மீன்	கோட்டை
''H''	,,	பி. ப. 5-00	சென். நீக்கலஸ் vs. பொலிஸ்	,,

கால் இறுதி ஆட்டம்

(1)	8-6-69	பி. ப. 3-45	''A''ல் வெற்றியீட்டியவர் vs. ''H''ல் ,,	யாழ். விளையாட்டரங்கு
(2)	,,	பி. ப. 5-00	''C''ல் ,, vs. ''B'' ,,	,,
(3)	.,	பி. ப. 3-45	''D''ல் ,, vs. ''E'' ,,	,, கோட்டை
(4)	,,	பி. ப. 5-00	''F''ல் ,, vs. ''G''ல் ,,	,, கோட்டை

அரை இறுதி ஆட்டம்

(i)	10-6-69	பி. ப. 3-45	(1)ல் வெற்றியீட்டியவர் vs. (2)ல் ,,	கோட்டை
(ii)	,,	பி. ப. 5-00	(3)ல் ,, vs. (4)ல் ,,	,,

இறுதி ஆட்டம்

	12-6-69	பி. ப. 4-30	(i) vs (ii)	கோட்டை

ஈழநாடு 10- வது ஆண்டு நிறைவு விழா

உள்ளம் கொள்ளை கொள்ளும் உடையலங்கார வர்த்தக விநோத உடைப்போட்டி பவனிகள்

ஊர்வல வீதி இதுதான்! இன்றே விண்ணப்பியுங்கள்!!

யாழ்ப்பாணம், செவ்.

வர்த்தகர்களதும், பொது மக்களதும் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் விதத்தில் அமையவிருக்கும் அலங்கார வர்த்தகபவனியும், விநோதஉடைப் போட்டியும் இம்மாதம் 14ந் திகதி காலை நடைபெறவிருக்கின்றன,

ஈழநாடு பத்தாவது ஆண்டு நிறைவு விழாவின் இறுதி நாளான 14ந்திகதியின்காலை விசேஷ நிகழ்ச்சியாக இது இடம்பெறுகின்றது.

எதுவித வயதுக்கட்டுப்பாடுமின்றி நீங்கள் அனைவருமே தனியாகவோ, கூட்டமாகவோ விநோத உடைப்போட்டியில் கலந்துகொள்ளலாம். விண்ணப்பப்பத்திரம் எதுவுமே இல்லை. ஈழநாடு சிவன்கோவில்மேலவீதி, த பெ.எண்:49, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன்உடனே தொடர்புகொள்ளுங்கள்.

விநோத உடைப்போட்டியில் முதல் மூவருக்கும்சிறப்பான மூன்று பரிசில்களும் ஓர் ஆறுதல் பரிசும் கூட வழங்கப்படவிருக்கின்றன. உங்களுக்குக் கிடைக்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தை தவறவிட்டுவிடாதீர்கள்.

பல வர்த்தக ஸ்தாபனங்களும் கலந்து கொள்ளும் அலங்கார வர்த்தக பவனியும் உடையலங்கார வர்த்தக பவனியும் 14ந் திகதி காலை 8 மணிக்கு ஈழநாடு காரியாலயவாசலிலிருந்து பின்வரும் வீதிகளில செலலும்.

ஈழநாடு காரியாலயத்திலிருந்து வடக்கு நோக்கி மானிப்பாய் வீதி வழியாக ஐந்துசந்தி.

அங்கிருந்து வலப்பக்கம் திரும்பி மனோகரா தியேட்டர் - நாவலர் பாடசாலைச் சந்தி.

அங்கிருந்து காங்கேசன் துறைவீதிவழியாக வடக்கு நோக்கி தட்டாதெருச்சந்தி:

அங்கிருந்து வலப்பக்கம் திரும்பி அரசடிவீதிவழியாக கந்தர்மடம்சந்தி, நல்லூர் கந்தசாமி கோவில் வழியாக முத்திரைச்சந்தை.

அங்கிருந்து கச்சேரி-நல்லூர் வீதி வழியாக கச்சேரி வை.எம்.சி.ஏ. சந்தி.

கண்டிவீதி மெயின்வீதிவழியாக மில்க்பார் முதலாம் குறுக்குத்தெருச்சந்தி.

அங்கிருந்து வலப்பக்கமாகத் திரும்பி, வேம்படி பாடசாலையைக் கடந்து ஆஸ்பத்திரிச்சந்தி.

ஆஸ்பத்திரிவீதி வழியாக யாழ்ப்பாணம் நவீன மார்க்கட் வரைவந்து, ராணி

(4-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில்

எட்டுவயதுச் சிறுமிக்கு ஊசிமாறிஏற்றமுயன்றாராம்

ஆண்தாதி உடனடி இடமாற்றம்:

பிரதம தாதிக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,செவ்.

எட்டு வயதுச் சிறுமிஒருவருக்கு டாக்டரால் எழுதப்பட்ட ஊசியைப் போடாமல் வேறொரு ஊசியை ஏற்ற முயன்ற ஆண் தாதி ஒருவர் உடனடியாக ஆஸ்பத்திரி வைத்திய சுப்ரீண்னால் அங்கிருந்து இட மாற்றம் செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம் வவத்திஸ்வரக் கல்லூரி மாணவியான வாசுகி என்ற 8 வயதுச் சிறுமிக்கு காலில் ஏற்பட்ட புண்ணுக்கு வைத்தியம் செய்ய ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது, சிகிச்சை நிலையத்தில கடமையாற்றிக் கொண்டிருந்த ஹுசேன் என்றமாணவ ஆண் தாதி டாக்டரால எழு

(4ம் பக்கம்பார்க்க)

வரி விளம்பரம்

விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் இ. போ. ச. டிப்போவுக்குத் தெற்கே கிணற்றுடன் 19 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வீடு, கடை, தொழிற்சாலை முதலியன கட்ட ஏற்றது. ஒருமித்தோ அல்லது சொரியலாகவோ விற்கப்படும். இளையப்பா, அன்னங்கை, கோண்டாவில். 1173

ஆறும், ஏழாந்தர முதலாம், இரண்டாம் பருவப் பயிற்சிகள் விற்பனையாகின்றன. சுன்னாகம் தனலக்குமி புத்தகசாலையிலும் ஏனைய புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். 1174

கார்:
EY தொடரிலக்க மொறிஸ் மைனர் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்புகொள்க: கயிலாயநாதன், மாவடி, வட்டுக்கோட்டை. 1171

தேவை

பயிற்சியாளர்கள் தேவை இம்மாதம் 15-ந் திகதிக்கு முன்னர் நேரடித் தொடர்பு கொள்ளவும். கொழும்பு ஸ்ரூடியோ, யாழ்ப்பாணம். தொலைபேசி: 410 1168

முகாமையாளர் தேவை. வயது 22—35. சிரேஷ்ட வகுப்பில் தேர்ச்சியுள்ளவராகவும், அத்துடன் கூட்டுறவுப் பயிற்சி தராதரம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். ரொக்கம் ஆயிரம் ரூபா பிணையும், உறுதிப் பிணை இரண்டாயிரமும் இருத்தல்வேண்டும். சம்பளம் மாதமொன்றிற்கு 90 ரூபா வீதம் கொடுபடும் (அலவன்ஸ் உட்பட). 10-6-69 க்கு முன்னர் விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். காரியதரிசி, கந்தவனம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை. 1172

ராஜா 141வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்குஅரைக்கட்டணம்

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி — ஜமுனா
நடித்த
நிச்சயதாம்பூல

ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் 92, கண்டி வீதி, திரு. த. சபாபதி அவர்களிடம் 1-1-68க்கு முன் வைத்த அடைவுநகைகளில் மீட்கப்படாதவை 30-6-69 திங்கட்கிழமை காலை பத்து மணி தொடக்கம் அதேயிடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை.
ஏலவிற்பனவாளர்
1585

கிராமசபை வேலணை
கேள்வி
அறிவித்தல்

வேலை விபரம்: 4-ம் வட்டாரம் வைரவகோவில் வீதி.

வேலணை கிராமசபை அக்கிராசனரால் மேற்குறிப்பிட்ட வேலைசெய்வதற்கு 1969-ம் ஆண்டு ஆனி மாதம் 11-ம் திகதி புதன் காலை 9-30 மணி வரையும் சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் 10-6-69-ந் திகதி பிற்பகல் 2-00 மணிவரையும் கேள்விப்பத்திரம் ரூபா 50/-ம் பத்திரப்பணம் ரூபா 5/-ம் கட்டியதன் பேரில் உத்தியோகபூர்வமான பத்திரங்கள் அங்கீகரிக்கப்பட்ட கொந்தராத்துக் காரர்கட்கு வழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் கிராமசபைக் காரியாலயத்திலும் வடபகுதி உதவி உள்ளூராட்சி அதிபரின் காரியாலயத்திலும் அறிந்து கொள்ளலாம்.

மு. குலசேகரம்பிள்ளை
தலைவர்
கிராமசபை, வேலணை.
1590

வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
ஜெய்சங்கர் - விஜயா
நடித்த
பெண்ணே
நீ
வாழ்க

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
முத்துராமன் - காஞ்சனா
நடித்த
பாமா விஜயம்

MANOHARA

'விளையாட்டில்யாழ்ப்பாணம் உயர்ந்துள்ளது'

உடுவில் திங்கள்

'கிராமப்புறங்களில் ஏற்பட்டிருக்கும் விளையாட்டு புத்துணர்ச்சி இன்னும் சில வருடங்களில் இலங்கை பல புதிய முன்னணி விளையாட்டு வீரர்களை தோற்றுவிக்க வழிகோலியுள்ளது. நாட்டின் ஏனைய இடங்களிலும் பார்க்க யாழ்ப்பாண இளைஞர்களின் விளையாட்டுத்தரம் மிக உயர்ந்ததாகக் காணப்படுகின்றது. விளையாட்டுத்தரம் உயர கிராமத்துப்பிள்ளைகளுக்கு போதிய பயிற்சிகளை விளையாட்டு உத்தியோகத்தர்கள்பயிற்றுவித்தல்வேண்டும்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில்நடைபெற்ற வலி வடக்கு உடுவில் பகுதி மூன்றாவது விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய தேசிய சேவைகள் அமைச்சின் விளையாட்டுப் பகுதி நிர்வாகஸ்தர் டாக்டர் எச்.எஸ்.ஆர்.குணவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்.'

வலி.வடக்கு விளையாட்டு உத்தியோகத்தர் திரு. ஏ. முருகையா விளையாட்டுப் போட்டியை நடத்தினார். திருமதி எச் எஸ்.ஆர். குணவர்த்தன போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்குப் பரிசில்கள் வழங்கினார்.

உடுவில் பகுதிவிளையாட்டு போட்டி முடிவுகள்

உடுவில், திங்கள்

வலிகாமம் வடக்கு உடுவில்பகுதி விளையாட்டுப் போட்டிகளில் கந்தரோடை சனசமூகநிலையம் 43 புள்ளிகளையும், லெவுண் கொஸஸ் கோஷ்டி 40 புள்ளிகளையும் உடுவில் புளட்ஸ் கோஷ்டி 23 புள்ளிகளையும் பெற்று முதல்மூன்று இடங்களையும் பெற்றன.

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு: 100 மீட்டர் ஓட்டம்: ஏ கதிரவேலு (லெவுண் கோஸஸ்), எஸ் பஞ்சலிங்கம் (விக்னேஸ்வரா), 200 மீட்டர் ஓட்டம்: வி சந்திரசிங்கம்(இந்து வி கழகம்), எஸ் பஞ்சலிங்கம் (விக்கினேஸ்வரா), 400 மீட்டர் ஓட்டம்: எஸ் இலகுநாதன் (இந்து விளையாட்டுக் கழகம்), சி தர்மகுலசிங்கம் (நேதாஜி கழகம்), 800 மீட்டர் ஓட்டம்: கே கதிர்காமநாதன் (கந்தரோடை கழகம்), எஸ் செல்வராஜா (நேதாஜி கழ்கம்). 1500 மீட்டர் ஓட்டம்: கே கதிர்காமநாதன் (கந்தரோடை கழகம்), எஸ் செல்வம் (புளட்ஸ் கழகம்), உயரம் பாய்தல்: எஸ். நடராசா (லெவுண்கோஸஸ்) எஸ். துரைசிங்கம் (லெவுண் கோஸஸ்), நீளம்பாய்தல்- வி. இராஜலிங்கம் (நேதாஜி கழகம்), கே கெங்கேஸ்வரன்(கந்தரோடைகழகம்', தடியூன்றிப்பாய்தல்- கே. கெங்கேஸ்வரன் (கந்தரோடை கழகம்), வி. இரத்தினசிங்கம் (விக்னேஸ்வரா) டிஸ்கஸ் துரோ- கே. பாலச்சந்திரன் (கந்தரோடை கழகம்). என். பஞ்சலிங்கம் விக்னேஸ்வரா). பட்சொட் துரோ- ரி. மாசிலாமணி (மல்வத்தை கழகம்), அன்டன் சந்திரசேகரம் (கந்தரோடை கழகம்), ஜவலின் துரோ- எஸ். துரைசிங்கம்

ஓடும் பஸ்ஸில்

45ஐ இழந்து 53 ஆகப் பெற்றார்

உடுப்பிட்டி, திங்கள்

ஓடும் பஸ்ஸில் திருடியவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார். சென்ற புதன் கிழமை பகல் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த இ.போ.ச. பஸ்ஸில் இந்த ஜேப்படி சம்பவம்பிடிபட்டது.

தீவுப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் பஸ்ஸில் அச்சுவேலிக்குப் பிரயாணம் செய்துகொண்டிருந்தார்.இவர் பஸ்ஸில் நித்திரை கொள்ளவே இதனைப் பயன்படுத்திக் கொண்டு அவரது சட்டைப் பையிலிருந்த 45 ரூபாவை ஜேப்படி செய்துவிட்டு முன்புறச் சீட்டில் சென்று இருந்து விட்டான் திருடன்.

இதனை அவதானித்துக் கொண்டிருந்த யாழ். மாநகர சபை ஊழியர் திரு.எம். எஸ். ஜேசுதாசன் பணத்தைப் பறிகொடுத்தவருக்கு விஷயத்தைக் கூறித் திருடனைப் பிடிக்க முயல்கையில் புத்தூருக்கு அண்மையில் திருடன் பஸ்ஸிலிருந்து குதித்து ஓடத் தொடங்கினான்.

பஸ் கொண்டக்டர் திரு.

களவாடப்பட்ட மாடுகள் அடையாளம் காட்டப்பட்டன

சந்தேக நபர் றிமாண்டில்

யாழ்ப்பாணம், செவ்.

திருட்டுப்போய் மீட்கப்பட்டு, பொலிஸ்பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த 7 மாடுகளையும் அவற்றின் சொந்தக்காரர்கள் பொலிஸ்நிலையத்திற்குவந்து அடையாளம் காட்டினார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவுநேரம் யாழப்பாணம் பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த சப்இன்ஸ்பெக்டர் பெர்னண்டோ, கான்ஸ்டபிள் த்ரஇதினம் ஆகியோர் றஸீக் சல்காம், சின்னத்துரை ஆகிய மூவருடனும் இந்த 7 மாடுகளையும் கைப்பற்றினார்கள்.

கிளிநொச்சியைச் சேர்ந்த குடியேற்றவாசிகள் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்துக்குவந்து 7 மாடுகளையும் அடையாளம் காட்டினார்கள்.

றிமாண்டில் வைக்கப்பட்டிருககும் வேதாரணியம் சின்னத்துரைஎன்ற சந்தேக நபர் இன்று கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார். மற்ற இரு சந்தேக நபர்களும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (கா. நி.)

வீதிகளைத் திருத்துவதில் அமைச்சு அக்கறை

கொழும்பு, ஞாயிறு

விவசாய அபிவிருத்திக்குகந்த பிரதேசங்களுக்குச்செல்லும் வீதிகளைப் புதிதாக அமைப்பதற்கும், பழைய வீதிகளைத் திருத்துவதற்கும் பொதுமராமத்து, தபால் போக்குவரத்து அமைச்சு இப்பொழுது மிகவும்முக்கிய இடம் அளித்து வருகிறது. நாட்டின் உடனடியான தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவகையில் இவ் வீதிகள் குறைந்த செலவிலும் குறுகிய காலத்திலும் அமைக்கக்கூடிய வழிவகைகளைப் பின்பற்றி அமைக்கப்படும்.

சிலவீதிகள் 'ஜீப்' வண்டிகளும்,டிராகடர்கள் போன்றவையும் மட்டுமே போகக் கூடியனவாக இருக்கும் இவ் வீதிகள் 'சட்ட அமைப்பு என்ற முறைப்படி கட்டம் கட்டமாக திருத்தப்பட்டு காலப்போக்கில் மோட்டார் வாகனங்கள் சகலதும் செல்லக்கூடிய சிறந்த வீதிகளாக அமைக்கப்படும்.

'போதனா மொழியை மாற்றினால் நேரடி நடவடிக்கை எடுப்போம்'

ஈழத்தமிழ் இளைஞர் இயக்கம்

யாழ்ப்பாணம், செவ்.

'தமிழ்ப்பாடசாலைகளாக பொறுப்பேற்கப்பட்ட வடபகுதியிலுள்ள மூன்று பௌத்த பாடசாலைகளிலும் தமிழே தொடர்ந்தும் போதனாமொழியாக இருக்க வேண்டும். எமது இந்தவேண்டுகோளை அரசாங்கம் ஏற்க மறுத்தால் நாம் நேரடி நடவடிக்கையிலஇறங்கவேண்டி நேரிடலாம்.'

ஈழத்தமிழ் இளைஞர் இயக்கத்தார் விடுத்துள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்கள்.

இந்தஅறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சியவஸ டிக்கட்டை எந்த ஒரு தமிழ்மாணவனும் வாங்கக் கூடாது. தமிழ்ஆசிரியர்களும்கூட சியவஸ டிக்கட்டுகளை மாணவர்களுக்கு வற்புறுத்தி விற்கக்கூடாது. டிக்கட்டுகளைவிற்பனைசெய்யாது கல்விஅதிகாரிகளிடமேதிருப்பிக் கொடுக்கவேண்டும்.

ஆலயப்பிரவேச முயற்சியில் தாம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆலய தர்மகர்த்தாக்களும், சமுகத் தலைவர்களும், மாணவர்களும் இளைஞர்களும் போதியஆதரவு கொடுக்க வேண்டுமென்றும், ஆலயப்பிரவேச முயற்சியில் தாம் எடுக்கவிருக்கும்நடவடிக்கைபற்றி இயக்கச் செயற்குழு விரைவில் கூடி முடிவு எடுக்கவிருப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. (கா.நி)

கல்வித்தரம் குறைவதற்கு அரசாங்கமே காரணமாம்

உடுவில், திங்கள் த்தி வித்தியாசாலை ஸ்தாப

பொலிஸை ஏமாற்றினாராம் 4 மாதக் கடூழியச் சிறை

யாழ்ப்பாணம்,செவ்.

பொலிஸாருக்கு 'டிமிக்கி' கொடுத்து, பொலிசாரை ஏமாற்ற முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கொன்றில் எதிரிக்கு4 மாதக் கடூழியச் சிறைத் தண்டனையும், இரண்டு வருட பொலிஸ் நன்னடத்தையும் விதிக்கப்பட்டது.

இவ் வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் ஜனாப்.எம். ஜமீல் முன்னிலையில் நேற்று விசாரணை செய்யப்பட்டது.

நல்லூருக்கு அருகாமையில் நள்ளிரவு நேரம் சந்தேக நபர் நடமாடியதாகவும், மாமரம் எதுவுமே இல்லாத ஒரு வளவுக்குள் சென்றுவிட்டு, மாம்பழம் பொறுக்கச் சென்றதாகப் பொய் சொல்லி பொர்லிஸாரைஏமாற்றியதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

விசாரணை முடிவில் எதிரியான தெய்வேந்திரத்துக்கு நான்கு மாதக் கடூழியமும், இரண்டு வருட பொலிஸ் நன்னடத்தையும் விதிக்கப்பட்டது. (கா.நி)

மாணவர் கல்வி வளர்ச்சிக்கு பிரார்த்தனை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்பபாணம் ஒஸ்மானியாக்கல்லூரி திருக்குர் ஆன் மஜ்லிஸ் சார்பாக கல்லூரி மண்டபத்தில்மீலாத் விழாக் கொண்டாடபப்பட்டது.

விழா 29-5-69 காலை 9-45 மணிக்கு கல்லூரி அரபுஆசிரியரும், மஜ்லிஸின் பொறுப்பாசிரியருமான மௌலவி ஏ. எம். ஏ.ஹசன் கபூரி தலைமையில் நடைபெற்றது.

விழாவின் முதல் நிகழ்ச்சியாக இறைமறை யாம் திருமறை ஆசிரியர்களாலும் மாணவர்களாலும், பெற்றோர்களாலும் பக்தி சிரத்தையோடு வீற்றிருந்து ஓதித் தமாம் செய்யப்பட்டது. சபை நடுவே அழகிய கம்பளங்கள் விரிக்கப்பட்டு அதன்மேல் குத்து விளக்குகளும், பன்னீர் செம்புகளும் அத்தர் சிமிழ்களும், சாம்பிராணிச் சட்டிகளும் எரிந்து வாசனையை யூட்டிக் கொண்டிருந்தது மட்டுமின்றி சபைக்கும் மெருகூட்டிக் கொண்டிருந்தன. திருமறையின் முப்பதுபாகமும் ஓதி முடிவுற்றபின், சபைத் தலைவரால் கல்லூரியின் உயர்ச்சிக்கும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், எல்லோரினதும் நல்வாழ்வுக்கும், சுபீட்சத்திற்கும் இறைவனிடம் மிக உடுக்கமான பிராத்தனை செய்யப்பட்டது. பிரார்த்தனையின் போது யாவரும் மெய்மறந்து இறை தியானத்தில் திளைத்து பிரார்த்தனைக்கு ''ஆமீன்'' கூறினர்.

விழாவின் இரண்டாம் நிகழ்ச்சியாக அண்ணல் நன்னபி நாயகம் முஹம்மத் (ஸல்)வின்புகழ் (மௌலூத்) மாணவர்களாலும், ஏனையோர்களரலும் ஓதப்பட்டு பிரார்த்தனையுடன் முடிவுற்றது.

மஜ்லிஸின் செயலாளர் செல்வன் தமீம் நன்றியுரை கூறினார்.

ரூ. 4 கோடி 80 லட்சம் கடனுதவி கிடைக்கும்

கொழும்பு, ஞாயிறு

அபிவிருத்திநிதிக் கூட்டுத்தாபனத்துக்காக உலக வங்கியிலிரு து இரண்டாந்தடவையாக 80 லட்சம் (சுமார் 4 கோடியே 80 லட்சம் ரூபாய்) டொலர் கொண்ட ஒரு கடனைப்பெறுவதற்கான பேச்சுவார்த்தைகள் வாஷிங்டனில் முடிவுறவிருக்கின்றன. 1969-ல் பெற்ற 40 லட்சம் டொலர் சுமார் 2 கோடியே 40லட்சம்ரூபாய்) கடனைப்போலவே, இக்கடனும் தொழிலபிவிருத்தித் திட்டங்களுக்கு உபயோகிக்கப்படும்.

அபிவிருத்திநிதிக்கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளரான திரு. எல்.ஏ. வீரசிங்காவும், திட்டமிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சைச் சேர்ந்த உயர் உத்தியோகத்தர் ஒருவரும் இதற்கான பேச்சுவார்த்தைகளை உலக வங்கியுடன் நடத்துவார்கள்.

'வாழ்க்கைச் செலவு

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபேர்யா, போயா 2-30 மணி
சிவாஜி — ஜமுனு
நடித்த
நிச்சயதாம்பூலம்

முத்துராமன் - காஞ்சனு
நடித்த
பாமா விஜயம்

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 10-30மணி
எம். ஜி. ஆர். - சாவித்திரி
நடித்த
பரிசு

MANOHARA
JAFFNA
Daily 6-30, & 10-00 P.M.
LAMBOO
IN
HONG KONG
(Hindi)

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த
உயிரா மானமா

4-வது வெற்றி வாரமாக
காட்சியளிக்கின்றது
கெப்பிட்டல் பிளாஸா வெலிங்டன்
(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்ப்பாணம்)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
ரவிச்சந்திரன் - காஞ்சனு - நாகேஷ்
அசோகன் - கீதாஞ்சலி
நடித்த
அதே கண்கள்

கிங்ஸ்லி
(கொழும்பு)
மைலன்
(ஜிந்துப்பிட்டி)
ஸ்ரீ கிருஷ்ணு
(திருமலை
விஜயா
(மட்டுநகர்)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
காண்பிக்கப்படுகின்றது
(ஜேம்ஸ்பொன்ட்)
(ஆடலழகி)
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
நாகேஷ் - மனோரமா - சோ
குமாரி சச்சு, சுந்தரராஜன்
நடித்து
வி. ஸ்ரீநிவாசனின் டைரக்ஷனில்
உருவாகி வெளிவந்துள்ள
மகோன்னத சித்திரம்
பொம்மலாட்டம்
திரைக்கதை வசனம்
சோ.
இசையமைப்பு
வி. குமார்

தைப் பறிகொடுத்தவருக்கு விஷயத்தைக் கூறித் திருடனைப் பிடிக்க முயல்கையில் புத்தூருக்கு அண்மையில் திருடன் பஸ்ஸிலிருந்து குதித்து ஓடத் தொடங்கினான்.

பஸ் கொண்டக்டர் திரு. ஆறுமுகம் உடனடியாக பஸ்ஸை நிறுத்தித் திருடனைத் துரத்திப் பிடிக்க முயல்கையில் திருடன் தன் வசம் வைத்திருந்த பணத்தை எறிந்து விட்டு ஓடி மறைந்து விட்டான்.

இதனால் 45 ரூபா பறிகொடுத்தவருக்கு எட்டு ரூபா கூடுதலாக 53 ரூபா கிடைத்தது

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 3—6—69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை 6-45 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 தேர்ந்த இசை, 1-30 செய்திச் சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 ஆங்கில வகுப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 வீணையும் புல்லாங்குழலும் 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7 03 கர்னாடக இசை, 7-35 வாத்தியஇசை, 7-45 நாடகம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 பேச்சு, 10-00 நேயர் கேட்டவை 10-30 செய்திச்சுருக்கம்.

REGAL JAFFNA
Daily 4 Shows
June Guiliano
Evelyn Stewart
in
ADIOS GRINGO
(Adults only)

சந்திரன் (கந்தரோடை கழகம்), என். பஞ்சலிங்கம் (விக்னேஸ்வரா), பட்சொட்துறோ- ரி. மாசிலாமணி (மல்வத்தை கழகம்), அன்டன் சந்திரசேகரம் (கந்தரோடை கழகம்), ஜவலின்-துறோ- எஸ். துரைசிங்கம் (லெவுண் கோஸஸ்), கே. பாலச்சந்திரன் (கந்தரோடை கழகம்), வினோத உடை-காந்திரூபன் கோஷ்டி லெவுண் கோஸஸ், கயிறு இழுத்தல்-லெவுண் கோஸஸ் 4X100 மீட்டர் ஓட்டம்-கந்தரோடை கழகம், இந்து கழகம், 4X400 மீட்டர் ஓட்டம்- கந்தரோடை கழகம், இந்து கழகம்.

முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்.

கொழும்பு விவேகானந்த சபையினரால் நடாத்தப்பட்ட அகிலஇலங்கைச் சைவ சமயபாடப் பரீட்சையின் பெறுபேறுகள், பங்குபற்றிய சகல பாடசாலைகளுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு விட்டதாக விவேகானந்த சபையினர் அறிவித்துள்ளனர்.

பரீட்சை

யாழ்ப்பாணம், செவ்.

லண்டன் சமயபாடப் பரீட்சை அக்டோபர் மாதம் 25-ந்தேதி நடைபெறவிருக்கிறது. இதற்கான விண்ணப்பப்படிவங்கள் நேற்று சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பரீட்சை விண்ணப்பங்கள் அடுத்தமாதம் 15-ந் தேதிக்குமுன்னர் அனுபேப்படவேணடும்.

அஞ்சல் எழுது வினைஞர் சங்கம்

உடுப்பிட்டி, திங்கள்

அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் புதிய தலைவர் தேர்தல் விரைவில் நடைபெற விருக்கின்றது.

தற்போதைய சங்கத் தலைவரான திரு. இ. அந்தோனிப்பிள்ளையுடன் திரு. ச. தோ. புவிராசசிங்கம் தலைவர் பதவிக்குப் போட்டியிட விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்பு பாலர் பாடசாலை
330, கே. கே எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

○ 3 வயது தொடக்கம் 5 வயது வரையுள்ள பாலர்கள் கல்வி பயில, 'டிப்ளோமா' பயிற்சி பெறும் ஆசிரியைகளால் கற்பிக்கப்படுகின்றது.

○ சில மாணவர்களுக்கு மட்டுமே இடமுண்டு. மாதக் கட்டணம் ரூ. 7-50 மட்டுமே!

சியவஸ டிக்கட்டை எந்த ஒரு தமிழ்மாணவனும் வாங்

தாகவும் இங்கு தெரிவிக்கப் பட்டுள்ளது. (கா. நி)

கல்வித்தரம் குறைவதற்கு அரசாங்கமே காரணமாம்

உடுவில், திங்கள்

'மாணவர்களிடையே தற்பொழுது காணப்பட்டுவரும் ஒழுக்கங்களுக்கும் சற்றுச் சில வருடங்களுக்கு முன்னிருந்த மாணவர்களிடையே இருந்த ஒழுக்கங்களுக்கும் நிரம்பிய வித்தியாசம் காணப்படுகிறது. கல்வித்தரம் கூட மிகவும் குறைந்து காணப்படுகிறது. மாணவர்களிடையே பண்பாடு குறைந்து, அடக்கமின்மை, பயமில்லாத்தன்மை போன்றன தலைதூக்கியுள்ளன. இவற்றுக்கெல்லாம் காரணம் கல்வியில் அரசாங்கம் தலையிட்டமையே. அரசாங்கத் தலையீடுதான் கல்வியின் தரம் குறையக் காரணம் என்று கூறலாம். ஆசிரியர், அதிபருக்கும், அதிபர் வித்தியாதிபதிக்கும், வித்தியாதிபதி இயக்குனருக்கும் பதிலளிக்க வேண்டியவர்களாய் அவர்களின் கட்டளைகளை மட்டும் நிறைவேற்ற முன்னிற்பதால் நல்லொழுக்கம் சிதைவுறுகின்றது.'

உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. எஸ். முத்துலிங்கம் உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை ஸ்தாபகர் பெற்றோர் தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி பாடசாலை அதிபர் திரு. எஸ். கதிரவேலு தலைமையில் விழா கொண்டாடப்பட்டது.

வெங்காயதட்டுப்பாடு நீங்கும்

கோட்டை, திங்கள்

கடந்த இரு வாரங்களாக பம்பாய் வெங்காயத்துக்கு நாட்டின்பல பாகங்களிலும் ஏற்பட்டிருந்த தட்டுப்பாடு 1500 தொன்னுக்கும் அதிகமான வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதால் இனி நீங்கி விடும் என உணவு இலாகா தெரிவித்துள்ளது.

இதைவிட இன்னும் 512 தொன் வெங்காயம் இறக்குமதி செய்யப்படவிருக்கிறது. சாதகமற்ற கால நிலையும் இந்தியக் கப்பலின் தாமதமுமே வெங்காயத் தட்டுப்பாட்டுக்குக் காரணமென உணவு இலாகாவைச் சேர்ந்தவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த இருகப்பல்களையும்விட மேலும் 2300 தொன் பம்பாய் வெங்காயம் இம்மாத முடிவிற்குள் இறக்குமதி செய்யப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

சமீபத்தில் வெங்காயத்துக்கு ஏற்பட்டிருந்ததட்டுப்பாட்டினால் றுத்தல் 60சதம் தொடக்கம் 80 சதம் வரை கொழும்பிலும் வேறு பல இடங்களிலும் விற்கப்பட்டுள்ளது.

தேசிய பென்ஷன் திட்டப் பிரசாரம்

கோட்டை, திங்கள்

தேசிய பென்ஷன் திட்டம் பற்றி பொதுமக்களுக்கு மாகாணவாரியாகச் சென்று விளக்கம் கொடுக்க இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது. இத்திட்டம் பற்றிய அறிவு மக்களிடையே மிகக் குறைவாகவேயுள்ளது என பிரஸ்தாப கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்தஅதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதன் காரணமாகத்தான் மேற்படி நடவடிக்கைமேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரிகிறது.

ரஷ்யாவில் காலமானார்

கோட்டை, திங்கள்

உள்ளூராட்சி தொழிலாளர் சங்கததைச் சேர்ந்த திரு. காமினிதாசா பலிஹகார ரஷ்யாவில் காலமானார். இலங்கையிலிருந்து தொழிலாளர் சம்மேளனத்தின் குழுவோடு கிழக்கு ஜேர்மனிக்குச்சென்று அங்கு மேதினக் கொண்டாட்டங்களில் கலந்து விட்டுநாடு திரும்புகையில் ரஷ்யாவில் காலமானார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது உடலை இலங்கைக்குக் கொண்டு வருவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கதிர்காமத்துக்கு கிராமசபை

கோட்டை, திங்கள்

இதுவரையும் மொனராகலைப் பகுதி அரசாங்க அதிபரின் நிர்வாகத்தின் கீழ் இருந்துவந்த கதிர்காமத்துக்கு வெகுவிரைவில்கிராம சபை நிர்வாகம் கிடைக்கவிருக்கிறது. இப்புது கிராம சபை 7 வட்டாரங்களைக் கொண்டதாக வமையும்,

அடுத்த சில மாதங்களுக்கிடையில் கதிர்காமத்தின் புதிய கிராமசபைக்கான தேர்தல் நடைபெறுவதற்கு வேண்டிய ஆயத்தங்களைத் தேர்தல் இலாகா மேற்கொண்டுள்ளது.

ஒரு கடனைப்பெறுவதற்கான பேச்சுவார்த்தைகள் வாஷிங்டனில் முடிவுறவிருக்கின்றன. 1969-ல் பெற்ற 40 லட்சம் டொலர் சுமார் 2 கோடியே 40லட்சம்ரூபாய்) கடனைப்போலவே, இக்கட

மிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சைச் சேர்ந்த உயர் உத்தியோகத்தர் ஒருவரும் இதற்கான பேச்சுவார்த்தைகளை உலக வங்கியுடன் நடத்துவார்கள்.

'வாழ்க்கைச் செலவு புள்ளியும் உயர்கிறது

கொழும்பு, ஞாயிறு

நாளாந்தம் வாழ்க்கைச் செலவு அதிகரித்துக் கொண்டே போகிறது என்ற பொதுமக்களின் புகாருக்குச் சரியான ஆதாரமாக, 'வாழ்க்கைச்செலவு புள்ளி'யும் மாதாமாதம் உயர்ந்து கொண்டே போகிறது.

ஏப்ரல் மாதம் 127.7 ஆக இருந்த வாழ்க்கைச் செலவு புள்ளி மே மாதம் மேலும் .2 புள்ளிகளால் உயர்ந்து, 129.7 ஆகிவிட்டது.

கொல்வதாகப் பயமுறுத்தினராம்

காங்கேசன்துறை, திங்கள்

வவனியா உள்ளூராட்சி ஆணையாளரான இளவாலையைச் சேர்ந்த நல்லைநாதனை கொலைசெய்வதாகப் பயமுறுத்தியதாக அதே ஊரைச்சேர்ந்த இராசரத்தினம் என்பவர் மீது குற்றம் சுமத்தி காங்கேசன் துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கிணற்றுப் பங்கு சம்பந்தமாக எழுந்த வாக்குவாதத்தை அடுத்தே இச்சம்பவம் நடைபெற்றதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. இதுசம்பந்தமாக விசாரணைசெய்யப்படுகிறது.

'700 பேர் வேலை நிறுத்தம்'

தமது சங்கத்தைச் சேர்ந்த 700 அங்கத்தவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக இலங்கை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது இவர்கள் யாவரும் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்தவர்களாவர்.

கூட்டுத்தாபனத் தலைவர் திரு. குலசிங்கா, இலங்கை வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த 300 பேர் வேலை நிறுத்தத் திலீடுபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இவ் வேலை நிறுத்தம் சம்பந்தமாகக் கருத்துத் தெரிவிக்கையில் இச்சங்கத்தின் இரு பிரதான கோரிக்கைகள் கடந்த வாரம் நிறைவேற்றப்பட்டதெனவும், அவர்களின் மற்றக் கோரிக்கைகள் அரசாங்கத்தினாலேயே ஆராயப் படவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

'பௌத்தத்தில் சேரக்கூடாது'

உடுப்பிட்டி, திங்கள்

வடபகுதியில் மூன்று சிங்கள பௌத்த பாடசாலைகளை அரசாங்கம் கையற்பதைக் கண்டித்து அல்வாய் வடக்கில் சிறுபான்மைத் தமிழர்கள் கூட்டம் நடத்தினர். யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. என். ரி. செல்லத்துரை தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

அச்சுவேலி, புத்தூர், அல்வாய், கரவெட்டி ஆகிய இடங்களிலிருந்து சுமார் 100 சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதிகள் இக் கூட்டத்திற்கு வந்திருந்தனர். திருவாளர்கள் கே. பாலகிருஷ்ணன், ஏ. எம். வடிவேலு, ஏ. கந்தசாமி, குணரத்தினம் ஆகியோர் பேசினர்.

சிறுபான்மைச் சமூகப் பெற்றோர் ஆசிரியர்கள் பௌத்த மதத்தில் சேரக் கூடாது எனக் கோரும் தீர்மானமும் வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன.

ரூபா 10,000

கோப்பாய், திங்கள்

கல்வியங்காடு ஸ்ரீ ஞான பாஸ்கரோதய விளையாட்டு மைதானத்திற்கென விளையாட்டுத்துறை அமைச்சினால் ரூபா 10,000 ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

மண்டலாபிஷேகம்

மட்டுவில், திங்கள்

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலின் மண்டலாபிஷேக இருபத்தி எட்டாவதுநாள் விழா அப்பகுதி ஹரிஜனர்களால் சிறப்பாகவும் அமைதியாகவும் செய்யப்பட்டது.

பிரான்ஸின் புதிய ஜனதிபதி

பொம்பிடோவா, போஹரா?

வாக்களிப்பு மீண்டும் 15-ம் திகதி நடக்கிறது

பாரிஸ், ஜூன் 2

நேற்று நடந்த பிரான்ஸின் புதிய ஜனதிபதி தேர்தலுக்கான முதலாவது சுற்றுவாக்களிப்பில் தெரிவான முடிவு கிடைக்காததால், மீண்டும் இம்மாதம் 15-ம் திகதி தேர்தல் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய வாக்களிப்பில், முன்னாள் பிரஞ்சுப்பிரதமரும், ஜெனரல் டிகோலின் கட்சியைச் சேர்ந்தவருமான திரு. பொம்பிடோ முதலாவது இடத்தைப் பெற்றார். ஆயினும் ஜனதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கான பெரும்பான்மையான வாக்குகளை அவர் பெறாததால், மீண்டும் 2 ம் சுற்றுத்தேர்தல் நடைபெறவிருக்கிறது.

ஜெனரல் டிகோல் பதவி துறந்ததைத் தொடர்ந்து பிரான்ஸின் புதிய ஜனதிபதி தெரிவு இப்போது நடைபெறுகிறது. திரு. பொம்பிடோ நேற்றையவாக்களிப்பில் 45 சதவிகித வாக்குகளைப் பெற்றார். பிரான்ஸின் தற்காலிக ஜனதிபதியாக கடமையாற்றும் திரு. போஹர் 25 சதவிகித வாக்குகளைப் பெற்றார். கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர் திரு. டுக்ளேஸ் 20 சதவிகித வாக்குகளைப் பெற்றார்.

இந்த ஜனதிபதிதேர்தலில் 7 பேர் போட்டியிட்டனர். 15-ம் திகதி நடைபெறும், தேர்தலில்திரு. பொம்பிடோவும், திரு. போஹரும் நேரடியாக மோதிக்கொள்கின்றனர்.

தற்காலிக ஜனதிபதியாக இருக்கும் திரு. போஹரை போட்டியிலிருந்து விலகிக் கொள்ளுமாறு திரு: பொம்பிடோ வேண்டுகோள் ஒன்றினைவிடுத்தார். ஒரு மனதாக ஜனதிபதியைத் தெரிவு செய்வது நல்லதெனத் தெரிவித்து திரு. பொம்பிடோ விடுத்த வேண்டுகோளை திரு. போஹர் நிராகரித்துவிட்டார்.

முதல் சுற்றுத் தேர்தலில் திரு. பொம்பிடோ வெற்றி பெற்ற போதிலும், இம்மாதம் 15-ம் திகதி தேர்தலில் திரு பொம்பிடோவா திரு. போஹரா வெற்றி பெறுவார்கள் என்று சொல்லமுடியாத ஒரு நிலை நிலவுவதாகஅவதானிகள் கருதுகின்றனர்.

இடது சாரிகளின் ஆதரவு திரு. போஹருக்கே கிடைக்கலாமென்றும் அவரே ஜனதிபதியாகத் தெரிவு செய்யக் கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் கருதப்படுகிறது.

உலக கம்யூனிஸ்ட் மகாநாட்டில் யூகோ. கலந்து கொள்ளாது

பெல்கிரேட் ஜூன் 2

மாஸ்கோவில் வியாழக்கிழமை ஆரம்பமாகும் உலக கம்யூனிஸ்ட் மகாநாட்டில் யூகோஸ்லவாக்கியா கலந்து கொள்ளாது. நேற்று பெல்கிரேட்டில் இந்த உத்தியோக பூர்வமான அறிவிப்பு வெளியாகியது.

ரஷ்ய தலைநகரில் நடைபெறப்போகும் உலக கம்யூனிஸ்ட் மகாநாட்டினால் ஒரு மேம்பாட்டை வளர்க்கவோ ஏற்படுத்தவோ முடியாதென யூகோஸ்லாவாக்கிய தெரிவித்துள்ளது.

வியாழக்கிழமை மாஸ்கோவில் ஆரம்பமாகவிருக்கும் மகாநாட்டில் 70 நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வருடத்தில் வார்ஸோ துருப்புகள் தம் நாட்டின் மீதுபடை எடுத்தது குறித்து பிரஸ்தாபிப்பதில்லையென செக். கம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்துள்ளது

9 வருடங்களுக்குப் பின்னர் இந்தஉலக கம்யூனிஸ்ட் மகாநாடு நடைபெறுகிறது. சென்றவருடத்தில் இம் மகாநாடு நடைபெறுவதாக இருந்தது. செக். பிரச்னையைத் தொடர்ந்து மகாநாடு நடைபெறவில்லை.

"கல்விக்கு அவசியம்''

பருத்தித்துறை, திங்கள்

''விஞ்ஞானக் கல்வி வளர்ச்சியின் பொருட்டு வெளிநாடுகளுக்கு விஞ்ஞான ஆசிரியர் செல்வது விரும்பத்தக்கது மட்டுமன்றி அவசியமானதுமாகும். அரசியல், விருப்பு வெறுப்பின்றி, எந்த நாட்டில் விஞ்ஞானக் கல்வி சென்று அதைப் பெறுவது ஆசிரியனின் நோக்கமாக இருக்க வேண்டும்.''

இவ்வாறு நெல்லியடி மத்

'மணப்பெண்களே சீதனத்துக்கு பணம் சேர்க்கிறார்கள்'

புதுடில்லி, ஜூன் 2

இந்தியாவில் சீதனம் எவ்விதமெல்லாம் வாழ்க்கையைப் பாதிக்கிறதுஎன்பதை ஒரு பத்திரிகை நடாத்திய கணக்கெடுப்பு வெளிப்படுத்துகிறது. சீதனத்துக்காகப் பெற்றோர்கள் சிரமப்பட்டு பணம் சேர்க்கும் காலமிருந்தது. மணப்பெண்களே பணம் திரட்டும் கோலம் இப்போது காணப்படுகிறது.

இந்தியாவில் சீதனம்வழங்கக்கூடாது என்ற சட்டம் இருக்கிறது. எனினும் சட்டத்தின் வழியில் நடப்பவர் எத்தனைபேர்?— என்று அப்பத்திரிகை இப்படியாகக் குறிப்பிட்டுள்ளது.

உஷாகுமாரி என்ற இளம் பெண் காலை 9-30 மணிக்கு அலுவலகம் வந்தால் இரவு 6-30 மணிவரை தட்டச்சு முன் அமர்ந்து யந்திரமாகவே வேலை செய்கிறாள். இவரை இப்பத்திரிகையின் நிருபர் பேட்டி கண்டார். மாதச்சம்பளமாக அவளுக்கு 200 ரூபாய் தான். 'இந்தவேலை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?' என்று நிருபர் கேட்டதற்கு, 'வேலை பிடிக்கவில்லை. சீதனத்துக்குப் பணம் சேர்க்கவேண்டியிருக்கிறது. என்ன செய்வது?'' என்றாளாம்.

இதேபோன்று அலுவலகங்களில் பணியாற்றும் பல பெண்கள் சீதனத்தைத் திரட்டும்கோலம் இப்போது காணப்படுவதாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

நாம் தமிழர் இயக்கத்தை தடை செய்ய வேண்டுமாம்

கண்டி, திங்கள்

'நாம் தமிழர்' இயக்கத்தைத் தடை செய்ய வேண்டுமெனப் பிரதமரைக் கோரும் ஒரு தீர்மானம் ஹெவவிஸா கோரளை கிராமசபையின் கூட்டமொன்றில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இக் கூட்டத்துக்கு இக் கிராமசபையின் பதில் தலைவர் திரு. எம். டி. எம். டி. தஸநாயக்கா தலைமை தாங்கினார்.

இந்த 'நாம் தமிழர்' இயக்கம் போன்றவைகளைத் தடுக்காவிட்டால் மலைநாட்டிலுள்ள கிராமவாசிகள் பெரிதும் பாதிக்கப்படுவர் என சபை அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் சுட்டிக் காட்டினர்.

இலங்கையர் அல்லாதவர்கள் தாங்கள் வைத்திருக்கும் நிலங்களை இலங்கையர் அல்லாதவர்களுக்கு விற்கக் கூடாது. அந்நிலங்களை அரசாங்கத்துக்கோ அல்லது இலங்கையருக்கோ விற்க வேண்டும் என்றவொரு தீர்மானமும் இச் சபை அங்கத்தவர்களால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கண் சிகிச்சை வைத்தியர் நியமிக்க கோரிக்கை

புலோலி, திங்கள்

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி வடமராட்சிப்பகுதியில் பிரதம ஆஸ்பத்திரியாக இருந்தும் கண் நோய் சிகிச்சைப் பிரிவு கிடையாதாகையால் கண்நோய்க்குச் சிகிச்சை பெறவிரும்பும் நோயாளிகள் யாழ்ப்பாணம் அல்லது கொழும்பு ஆஸ்பத்திரிக்கே செல்ல வேண்டிய

யமாக விளங்கும் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிக்கு இவ்வளவுகாலமாக கண்சிகிச்சைக்கு தகுந்த டாக்டரை நியமிக்கவில்லை. இதனால் ஏழைமக்கள் கண்சிகிச்சை பெறமுடியாது கஷ்டமடைகிறார்கள். உடனடியாக கண்சிகிச்சை டாக்டரை நியமித்துத் தரவேண்டும்.

"ஆட்சிமன்ற பிரதிநிதிகளுக்கு வள்ளுவரின் அரசியல் அவசியம்"

— உப சபாநாயகர்

உடுப்பிட்டி, திங்கள்

''ஒரு நாட்டை நல்வழியில் செலுத்துவதற்குத் தகுந்த அறிஞர்கள் தேவையென வள்ளுவர் கூறியது இன்றும் இலங்கைக்குப் பொருந்தக் கூடியதாயுள்ளது. நாட்டில் ஒரு சிலர் மட்டும் செல்வந்தராக இருந்து விட்டால் போதாது. செல்வம் பரவலாக இருக்க வேண்டும். சர்வாதிகார ஆட்சிநடத்துபவர்கள் எப்போதும் அழிந்தே தீருவார்கள். இங்கிலாந்தில் கொடுங்கோல் நடாத்திய சார்ல்ஸ் மன்னன் இறுதியில் மரணத்தைத் தழுவ நேரிட்டது.''

இவ்வாறு உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம்.பி.யுமான திரு. மு சிவசிதம்பரம் கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரின் 13-வது வருடாந்த வள்ளுவர் மகாநாட்டின் முதலாம் நாள் நிகழ்ச்சியில் ''வள்ளுவன் கண்ட அரசியல்'' என்னும் தலைப்பில் பேசுகையில் கூறினார்.

கரணவாய் உபதபாற்கந்தோருக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள அண்ணா அரங்கில் நேற்றுமாலை ஆரம்பமான இவ்விழா வடபகுதி உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''திருக்குறள் எக்காலத்திற்கும் உரியது. கார்ல் மார்க்ஸ் எழுதிய நூல்கள், நூல் எழுதப்பட்ட காலத்திற்கே உரியது. ஒரு நாட்டின் அரசியல் அமைப்பை நுணுக்கமாக வள்ளுவர் ஆராய்ந்துள்ளார். மனிதன் நாடோடியாக இருந்த காலத்தில் அரசியல் அமைப்புத் தேவைப்படவில்லை. ஒரு சமூக அமைப்புத்தோன்றிய பின்னர்தான் அரசியல் வளர்ச்சி ஏற்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியின்போதே நாம் உணவுற்பத்தியைப் புறக்கணித்து விட்டோம். ஆங்கிலேயர் இலங்கையைச் சுரண்டிவிட்டனர்.

இதனாலேயே பிறநாட்டவரை நம்பிவாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. மிகவிரைவில் எமது சுயதேவையைப் பூர்த்திசெய்து கொள்ளும் காலம் வரும். கடந்தபத்து வருடங்களாகத் தமிழ்-சிங்கள இனத்திடையே இருந்து வரும் பரஸ்பர பகைமையே இன்று நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது. நாடுவளர்ச்சியடைய முன்னேற்றப் பாதையில் செல்ல இருசாராரும் தாம் இந்நாட்டின் சமஉரிமையுள்ள மக்கள் என எண்ணி வாழ வேண்டும்.

இதற்காகவே வள்ளுவர் அரசியல் வாதிகளுக்குஅமைந்திருக்க வேண்டிய குணதிசயங்களை வற்புறுத்தியுள்ளார். எமது ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்குக் கட்டாயம் ''வள்ளுவரின்அரசியல்'' தெரிந்திருக்கவேண்டும். உரிமைகள் காலத்திற்குக்காலம் மாறலாம். ஆனால் கடமைகள் அடிப்படையாக என்றும் மாறுவதில்லை.''

வடபிரதேச (சோவியத்) கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது:

''தமிழர் பண்பாட்டால் உயர்ந்தமக்கள் அவர்களின் நாகரீகம் பாரம்பரியம் மிக்கது. இந்தத்துறையில் வள்ளுவன் வகுத்த அறநெறி வையகத்தின் கவனத்தை ஈர்த்தது. 'தோன்றிற் புகழொடு தோன்ற வேண்டும்' என்ற உண்மையை உணர்ந்த வள்ளுவர் தன் வாழ்வால், சிந்தனையால்தமிழனை மட்டுமல்ல அகிலத்தோரின் அன்பையும், அங்கீகாரத்தையும் பெற்றுள்ளார்.

திருமதி சண்முகதாஸ் பேசுகையில் மனைவி தனது கணவன் செய்யும் அறங்களுக்கு ஊக்கம் கொடுத்து உதவிச் சிறந்த வாழ்க்கைத் துணைநலமாகத் திகழ வேண்டும் என்று கூறினார்.

மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. அ. சண்முகதாஸ், அரசகரும மொழித்திணைக்களத்தைச் சேர்ந்த திரு வ. சிவராசசிங்கம், பிரம்மஸ்ரீ திரு. ஞானசம்பந்தக் குருக்கள் ஆகியோரும் பேசினர்.

எதிரிக்கு அபராதம்

வல்வெட்டித்துறை, திங்கள்

பருத்தித்துறை பஸ் டிப்போவைச் சேர்ந்த ஈ. முருகேசு என்னும் பஸ்கண்டக்டரை கரணவாயைச் சேர்ந்த சி. சின்னத்தம்பி என்பவர் கடந்த பங்குனிமாதம் 23-ந் திகதி கடமையில் ஈடுபட்டிருந்த சமயம் தாக்கியதாக பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட

'சோலைவரியில் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உதவ வேண்டும்'

உடுப்பிட்டி, திங்கள்

'இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் ஊழல்கள் எதுவுமின்றி நேர்மையாக இயங்கிவரும் சபைகளுள்ளே சிறந்த இடம் வகிப்பது உடுப்பிட்டிக்கிராம சபையேயாகும். இக்கிராம சபைத்தலைவரின் நேர்மையான சேவையே இதற்குக் காரணம். உள்ளூராட்சிமன்றங்கள்சிறப்பாக நடைபெற வருவாய் கொடுக்கக்கூடிய புதிய வருவாய் வாய்ப்புக்களை அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். மத்திய அரசாங்கம் சோலைவரியில் ஒருபகுதியை உள்ளூராட்சிமன்றங்களுக்குஒதுக்க வேண்டும்'

மேற்கண்டவாறு உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பியுமான திரு.மு. சிவசிதம்பரம், உடுப்பிட்டிக்கிராம சபை அலுவலக புதிய கட்டடத் திறப்புவிழாவில்பேசுகையில் கூறினார். உள்ளூ

களும் இருந்தால்போதாது. எதற்கும்போதிய பணம் தேவை. இலங்கையைப் பொறுத்தவரையில் நாம் மிகவும் பின்தங்கியிருக்கிறோம். விரைவில் உடுப்பிட்டிக் கிராம சபைப் பகுதிகளுக்கு மின்சாரவிநியோகம் செய்ய கடனுக்கு அமைச்சர் அங்கீகாரமளித்துள்ளார்' என்று சொன்னார்.

பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் பேசுகையில் சொன்னதாவது:-

'நான்குவருட காலமாக நான் இக்கிராமசபையில் உறுப்பினராகவும், உபதலைவராகவும் இன்றைய தலைவரின் நிர்வாகத்திலேயே இருந்திருக்கின்றேன். ஆட்சிமன்றம் தூரத்தில் இருப்பது; அதைச் சிந்திக்கமுடியாத பரம்பொருளாகச் சிலர் கருதுகின்றனர். மத்திய அரசாங்கம் தலத்தாபனங்கட்குக் கூடிய அதிகாரம் வழங்க

மேம்பாட்டை வளர்க்கவோ ஏற்படுத்தவோ முடியாதென யூகோஸ்லாவாக்கிய தெரிவித்துள்ளது.

வியாழக்கிழமை மாஸ்கோவில் ஆரம்பமாகவிருக்கும் மகாநாட்டில் 70 நாடுக

ளர் இந்தஉலக கம்யூனிஸ்ட் மகாநாடு நடைபெறுகிறது. சென்றவருடத்தில் இம் மகாநாடு நடைபெறுவதாக இருந்தது. செக். பிரச்னையைத் தொடர்ந்து மகாநாடு நடைபெறவில்லை.

சிங்கப்பூரில்

காடையர் அட்டகாசம்

சிங்கப்பூர், ஜூன் 2

சிங்கப்பூரில்நேற்றிரவுஏற்பட்ட கலவரத்தில் 2 பேர் படுகாயத்துக்குள்ளானார்கள். காடையர்கள் திடீரெனப் பிரவேசித்து இந்தக்கலவரத்தை ஏற்படுத்தினார்கள்.

, இரண்டுவீடுகளுக்குத் தீ வைத்தார்கள். ஆனாலும் வீட்டிலிருந்தவர்கள் சிறு சிறு காயங்களுடன் தப்பினார்கள்.

கடும் பந்தோபஸ்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காலவரையின்றி இந்திய விமானிகள் வேலைநிறுத்தம்

புதுடில்லி, ஜூன் 2

இந்திய ‘ஏயர்லைன்ஸ்’ விமான சேவையைச் சேர்ந்த விமானிகள் காலவரையின்றி வேலைநிறுத்தத்தைத் தொடருவதென முடிவு செய்துள்ளனர்.

தமது கோரிக்கை விஷயத்தில் நிர்வாகம் பிடிவாதமாக இருப்பதாக விமானிகள் சங்கப் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று அடையாள வேலைநிறுத்தம் மேற்கொண்ட விமானிகள் தமது கோரிக்கை நிறைவேறும் வரை வேலைநிறுத்தத்தைத் தொடருவதென தீர்மானித்தனர். நேற்றும், இன்றும் பாலம் விமான நிலையத்தில் ஒரு விமான சேவையாவது நடைபெறவில்லை

விமானியாகக்கடமையாற்றாத குறைந்ததரத்திலுள்ள ஒருவரை பம்பாய் காரியாலயத்தில் பொறுப்பதிகாரியாக நியமித்ததைத் தொடர்ந்து பம்பாய் - புதுடில்லி விமான சேவையிலுள்ள விமானிகள் திடீரென வேலைநிறுத்தம்செய்தனர். இப்போது வேலைநிறுத்தம் பரவியுள்ளது.

‘‘தாஷ்கண்ட் பிரகடனமில்லை’’

புதுடில்லி, ஜூன் 2

சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் பாகிஸ்தான் விஜயத்துக்குப் பின்னர் வெளியிடப்பட்டுள்ள கூட்டு அறிக்கையில் தாஷ்கண்ட் பிரகடனம் பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லையென ‘சண்டே ஸ்ராண்டர்ட்’ என்ற இந்தியப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

அப்பத்திரிகையின் அரசியல் விமர்சகர் இது பற்றி எழுதியுள்ள கட்டுரையில் திரு. கொஸிஜின் பாகிஸ்தானில் தாஷ்கண்ட் பிரகடனத்தைப்பற்றி பேசியிருந்த பொழுதிலும் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

பயணம்ரத்து

வாஷிங்டன், ஜூன் 2

அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸனின் விசேஷ பிரதிநிதி திரு.நெல்சன்ரொக்ஸல்லர் வெனின்சுலா பயணத்தை ரத்துச் செய்தார். அங்கு செல்வதால் பெருத்த கலவரம் ஏற்படலாமெனத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர் தமது பயணத்தை ரத்துச் செய்தார்.

‘சீனாவின் பொருளாதாரம்’

மாஸ்கோ, ஜூன் 2

சீனாவின் பொருளாதார நிலைமை பெரும் குழப்பத்துக்குள்ளாகியிருப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. 1966ம் ஆண்டு இருந்த நிலையைவிட 20 சதவிகிதம் சரிந்து விட்டதாகக் குறிப்பிட்டுள்ளது.

கிரிக்கு அழைப்பு?

டப்ளின், ஜூன் 2

இந்தியாவின் தற்காலிக ஜனாதிபதி திரு. வி. வி. கிரியை அயர்லாந்துக்கு வருமாறு அழைப்பு விடுப்பது பற்றி இங்கு யோசிக்கப்பட்டு வருகிறது.

அயர்லாந்தில் இன்னும் சில வாரங்களில் பொதுத் தேர்தல் நடக்கவிருக்கிறது.

அதன்பிறகு புதிய அரசாங்கம் திரு. வி. வி. கிரியை அயர்லாந்துக்கு வந்து சுமார் 1 வாரம் தங்கியிருக்குமாறு அழைப்பு விடுக்குமாறு யேமன் டிவேராவுக்கு யோசனை கூறக்கூடும்.

அவசியமானதுமாகும். அரசியல், விருப்பு வெறுப்பின்றி, எந்த நாட்டில் விஞ்ஞானக் கல்வி சென்று அதைப் பெறுவது ஆசிரியனின் நோக்கமாக இருக்க வேண்டும்.''

இவ்வாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் திரு. கே. எஸ். குகதாசனுக்கு அக்கல்லூரி ஆசிரியரும், மாணவரும் அளித்த பிரிவுபசார விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசிய அதிபர் திரு. க. சிவசிதம்பரம் கூறினார்.

விஞ்ஞான உயர்கல்விக்காக அமெரிக்கா செல்லவிருக்கும் திரு. குகதாசனின் சேவையைப் பாராட்டி ஆசிரியர் திரு. சி. திருச்செல்வம், மாணவன் எஸ். குலசேகரன் ஆகியோரும் பேசினர்.

திரு. குகதாசன் தமக்களிக்கப்பட்ட விருந்துக்கும், வாழ்த்துரைகளுக்கும் நன்றி கூறினார்.

வீரருக்குப் பாராட்டு

பருத்தித்துறை, திங்கள்

‘‘எமது பல போர்களிலும் நாம் பெற்ற வெற்றிக்கு எமது ஆசிரியரே பொறுப்பானவர். அதே போல நான் பாங்கொக், மலேஷியா முதலிய இடங்களில் துடிப்புடன் விளையாட்டில் கலந்து கொண்டதற்கான பெருமை எனது உடற்பயிற்சி ஆசிரியர் திரு. எஸ். கதிர்காமத்தம்பிக்கே உரியது.’’ என்று கரவை விண்மீன் விளையாட்டுக் கழகம் தமக்களித்த வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசுகையில் அண்மையில் இலங்கையிலிருந்து பாங்கொக் சென்ற உதைபந்தாட்ட வீரர் திரு. கே. ஸ்ரீதரன் கூறினார்.

பருத்தித்துறைப் பகுதி உடற்பயிற்சிப் போதனாசிரியர் திரு. எஸ் கதிர்காமத்தம்பி கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

கூட்ட இறுதியில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் திரு. ஸ்ரீதரனும் கலந்து கலந்து கொண்டார்.

யில் பிரதம ஆஸ்பத்திரியாக இருந்தும் கண் நோய்ச் சிகிச்சைப் பிரிவு கிடையாதாகையால் கண்ணோய்க் சிகிச்சை பெறவிரும்பும் நோயாளிகள் யாழ்ப்பாணம் அல்லது கொழும்பு ஆஸ்பத்திரிக்கே செல்லவேண்டிய நிலையிலிருந்து வருகிறார்கள்.

இதனை யொட்டி இப்பகுதி மக்கள் மகஜர் ஒன்று தயாரித்துள்ளார்கள். அந்த மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது: இப்பகுதிக்கு பிரபல

ச்சைக்கு தகுந்த டாக்டரை நியமிக்கவில்லை. இதனால் ஏழைமக்கள் கண்சிகிச்சை பெறமுடியாது கஷ்டமடைகிறார்கள். உடனடியாக கண்சிகிச்சை டாக்டரை நியமித்துத் தரவேண்டும்.

அந்தமகஜரை உடுப்பிட்டி ஆட்சிமன்ற உறுப்பினரும் உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரத்திற்கு, சுகாதாரமந்திரிக்கும் அனுப்பியுள்ளார்கள்.

மின்சாரத் தடையினால் நோயாளர்கள் கஷ்டம்

புலோலி, திங்கள்

பருத்தித்துறை பகுதியில் அடிக்கடி மின்சார விநியோகம் துண்டிக்கப்படுகிறது. கடந்த இரு வாரங்களாக இந்த மின்சாரத் துண்டிப்பால் ஆஸ்பத்திரிகளும் படமாளிகைகளும் வர்த்தக அலுவலகங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

மின்சாரம் இல்லாததால் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் நோயாளிகள்பெரும் அவலப்பட்டுள்ளனர். மின்சாரம் இல்லாததால் முக்கியமான கடும் நோயாளிகளுக்கு டாக்டர்மார், தாதிகள் தகுந்த நேரத்தில் சிகிச்சை அளிக்கமுடியாது கஷ்டமடைகிறார்கள். மந்திகை ஆஸ்பத்திரி மாலை ஏழு மணியிலிருந்து இரவு பத்து மணி வரை இருள்மயமாக காட்சியளிக்கிறது.

ஆஸ்பத்திரியில் வேறு வெளிச்சங்கள் இல்லாததால் வார்ட்டிலிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகள் அயலில் உள்ளவர்களுடைய உதவியை நாடி கைலாம்புகள் மூலம் இரவைக் கழிக்கிறார்கள். பிரசவ வேதனையில் வரும் தாய்மார்கள் வெளிச்சம் இல்லாது பெரும் கஷ்டமடைகிறார்கள்.

“குறள் காட்டும் மார்க்கம் தனித்துவமானது”

உடுப்பிட்டி, திங்கள்

''தமிழன்நிலை உயர்ந்தது குறள் எழுந்த காரணத்தினாலேயாகும். குறள்காட்டும் மார்க்கம் தனித்துவம் வாய்ந்தது. தமிழ் இலக்கியங்கள்பல புதிதாகத்தோன்றும்பொழுது புது மெருகு பெறும். வேற்றுமொழி நூல்களைப் படிக்கவேண்டாமென்று நாம் சொல்லவில்லை. ஆனால் எமது நூல்களின்படி கற்று அதன்படி நடக்கவேண்டும்.''

இவ்வாறு மட்டக்களப்பு முதல்எம்.பி. திரு.செ.இராசதுரை கருணையம்பதி இளைஞர்முன்னேற்றக் கழகத்தின் 13-வது வள்ளுவர் மகாநாட்டின் முதல்நாள் நிகழ்ச்சியில் பேசுகையில் கேட்டுக் கொண்டார். அவர் மேலும் கூறியதாவது:

பலநூற்றாண்டுகளாகப்பல தமிழ் அறிஞர்களும் ஆராய்ந்து வெவ்வேறு விளக்கங்களைக் குறளுக்குக் கொடுத்தனர். வள்ளுவன் ஒருவனாலேயே தமிழகத்தின் புகழ் உயர்ந்தது என்று காலத்தை உணர்ந்த கவி பாரதியார் பாடியுள்ளார். சென்ற நூற்றாண்டில் லண்டனில் ஆய்வுக்குழுவொன்று திருக்குறள் ஆராய்ச்சியில் ஈடுபட்டது. இக்குழு திருக்குறளை ஒரு மனிதனே எழுதியதாக நம்பவில்லை. பலர் சேர்ந்தேதிருக்குறளை எழுதியிருக்கவேண்டுமென்றுவியந்தனர்.

தேவையானஅத்தனை விஷயங்களும் குறளில் தங்கியுள்ளமையினால் வெளிநாட்டவர்களைக் குறள் வெகுவாக கவர்ந்துள்ளது. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பலமொழி இலக்கியங்களையும் படித்த ஏரியல்என்னும் அறிஞர் எந்த மொழியும் தராத இன்பத்தைத் திருக்குறள் தந்துள்ளதாகப் பாராட்டியுள்ளார்.

இப்பிறப்பில் எம்மால் படித்து முடிக்க முடியாத அளவு நூல்கள் தமிழில் உள்ளன. இளம்பிள்ளைகள் தமதுபெற்றோரைப் பேணவேண்டும். குறள் எத்தகைய கருத்துக்களைச் சொன்னாலும் அதுகாட்டுவது ஒரே மார்க்கமே.

போவைச் சேர்ந்த ஈ. முருகேசு என்னும் பஸ்கண்டக்டரை கரணவாயைச் சேர்ந்த சி. சின்னத்தம்பி என்பவர் கடந்த பங்குனிமாதம் 23-ந் திகதி கடமையில் ஈடுபட்டிருந்த சமயம் தாக்கியதாக பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரி சின்னத்தம்பியை குற்றவாளியாகக்கண்டு ரூபா 100 அபராதமும் 6மாத நன்னடத்தைப் பிணையில் செல்லுமாறும், அபராதம் கட்டத்தவறினால் 6 வாரச் சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

வேண்டுகோள்

கோப்பாய், திங்கள்

‘இக்கிராமத்தின் பொதுச் சுகாதார நலனையும், சிறப்பாக கிராம மக்கள் மத்தியில் மலேரியா நோய் பரவாது தடுக்கவும் கோப்பாய் சுகாதாரப் பகுதியினரால் தடுப்பு மருந்து வீடுகளில் அடிப்பதற்குத் தடைசெய்யாதீர்கள்’ என கோப்பாய் பகுதியில் மலேரியா நோய் தடுப்பு இயக்கத்தின் மேற்பார்வை அதிகாரியாகக் கடமையாற்றும் சுகாதார அதிகாரி திரு. எம். சிவப்பிரகாசம் கிராம மக்களைக் கேட்டுள்ளார்.

இங்குள்ள பலர் தங்கள் வீடுகளில் மேற்படி தடுப்பு மருந்து அடிப்பதைத் தடைசெய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

எழுச்சித் தினமும் எம். பி. பிறந்ததினமும்

மட்டுவில், திங்கள்

அகில இலங்கைத் தமிழரசுக்கட்சியின் எழுச்சி வாரம் இம்மாதம் 5ம் திகதி ஆரம்பமாகிறது. அதன் ஆரம்பதினமும், சாவகச்சேரி எம். பி.யின் பிறந்த தினமும் ஒரே நாளாக இருப்பதால் அன்றைய தினத்தை சாவகச்சேரி தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியினர் சாவகச்சேரியில் விழாவாகக்கொண்டாடுகின்றனர்.

இந்த விழாவில் துவிச்சக்கரவண்டிகளின் பவனியும், உழவு இயந்திரங்கள் ஏனைய வாகனங்களின் பவனிகளும் நடைபெற ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. திரு. நவரத்தினத்தைக் கைதடிச் சந்தியிலிருந்து ஊர் வலமாக அழைத்துவருவார்கள்.

ராட்சிமன்றங்களுக்குஒதுக்க வேண்டும்’

மேற்கண்டவாறு உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி.யுமான திரு.மு. சிவசிதம்பரம், உடுப்பிட்டிக்கிராமசபை அலுவலக புதிய கட்டடத் திறப்புவிழாவில்பேசுகையில் கூறினார். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.அ. அ. யோசேப், புதிய அலுவலகத்தைத் திறந்து வைத்தார். கிராமசபைத் தலைவர் திரு.ஆர்.ஆர். தர்மரத்தினம் தலைமையில் விழா நடைபெற்றது.

உபசபாநாயகர் மேலும் பேசுகையில், ‘நேர்மையான நிர்வாகமும், சிறந்தஊழியர்

உறுப்பினராகவும், உபதலைவராகவும் இன்றைய தலைவரின் நிர்வாகத்திலேயே இருந்திருக்கின்றேன். ஆட்சிமன்றம்தூரத்தில் இருப்பது; அதைச் சிந்திக்கமுடியாத பரம்பொருளாகச் சிலர் கருதுகின்றனர். மத்திய அரசாங்கம் தலத்தாபனங்கட்குக் கூடிய அதிகாரம் வழங்க வேண்டியது அவசியம். இல்லாவிடில் அத்தியாவசிய சேவைகள் தாமதமடையும்’

வல்வெட்டித்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு எம்.வி. இரத்தினவடிவேலு பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு.என். நடராசா ஆகியோரும் பேசினர்.

ஈழநாடு’ பத்தாண்டு நிறைவுவிழா

26 மைல் மரதன் ஓட்டம்

(14—6—69)

விண்ணப்பப்பத்திரம்

பெயர்: ....

விலாசம்
....
....

வயது: ....
1—6—69

....
கையொப்பம்

போட்டி விதிகள்

1. போட்டியில் பங்கு பற்றுபவர்கள் 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் திகதியன்று 21 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். அத்துடன் ஒரு விளையாட்டுச் சங்கத்தில் அல்லது இலங்கை A. A. A. யில் அங்கத்தவராக இருக்க வேண்டும்.

2. போட்டியில் பங்கு பற்றுபவர் ஏதாவது மருந்து குடிப்பவராக இருந்தால் விலக்கப்படத் தக்கவராக இருப்பார். உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட வைத்திய அதிகாரிகள் இவர் பங்கு பற்றக்கூடாது என்று தடுத்தால் அவர் போட்டியில் பங்கு பற்ற முடியாது.

3. போட்டியில் பங்கு பற்றுபவர் வீதி விதிகளைக் கவனித்து அதன்படி நடக்கவேண்டும்.

4. போட்டிஅமைப்பாளர்கள் வழங்கும் பானங்களைத் தவிர வேறெதையும் போட்டியில் பங்கு கொள்வோர் எடுத்துச் செல்லவோ, உண்ணவோ கூடாது.

5. போட்டியில் கலந்து கொள்வோர் ஓடும் போது காயம் ஏதாவது ஏற்பட்டால் அதற்கு போட்டி நிர்வாகஸ்தர் பொறுப்பாகமாட்டார்.

6. ஜூன் மாதம் 1-ம் திகதிக்குமுன் ஆறுமாதங்களாக தொடர்ந்து யாழ் மாவட்டத்தில் நிரந்தரமாக இருப்பவர்களே இப்போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

விண்ணப்பங்கள் யாவும் ஜூன் மாதம் 5-ம் திகதிக்குமுன் **‘ஈழநாடு’**, த. பெ. **எண்-49, யாழ்ப்பாணம்** என முகவரியிட்டு அனுப்பப்படல்வேண்டும்.

மணிவாக்கு

அன்பு எப்போதும் உரிமை கொண்டாடாது. அது எப்போதும் கொடுத்துக் கொண்டிருக்கும். அன்பு எப்போதும்துன்புறும். ஒருபோதும் ஆத்திரப்படாது. ஒருபோதும் பழிக்குப் பழிவாங்காது.

— மகாத்மா காந்தி.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமியவருஷம் வைகாசி மாதம்
21-ந் திகதி (3-6-69)

பிரஞ்சு அதிபர் தேர்தல்

ஸ்திரமற்ற அரசியலுக்கு ஒரு காலத்தில் பெயர் பெற்றிருந்த பிரான்சு நாட்டில் அரசியல் நெருக்கடி தலைதூக்கி மக்களுக்கு சலிப்பும் வெறுப்பும் உச்ச நிலையடைந்தபோது, மக்களின் வேண்டுகோளை ஏற்று, அவர்களின் அனுமதியுடன் அதிக அதிகாரங்களுடன் பிரான்சின் பிரதமராகப் பதவியேற்ற ஜெனரல் டிகோல் பின்னர் பிரான்சின் ஜனாதிபதியாகி உலகில் பிரான்சின் புகழையும் தனது செல்வாக்கையும் நிலைநாட்டி தாமாகவே தமது ஜனாதிபதி பதவிக்கு முடிவு தேடிக்கொண்டபின் புதிய ஜனாதிபதியாக ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தலில் பிரெஞ்சு மக்கள் தமது முடிவைத் தெளிவாகத் தெரிவிக்கத் தவறிவிட்டார்கள் இதனால் இம்மாதம் 15-ம் திகதி நடைபெறும் இரண்டாவது வாக்களிப்பின் பின்னர் தான் புதிய ஜனாதிபதி யார் என்பது தெரியவரும்.

ஜனாதிபதி பதவிக்கு ஏழு பேர் போட்டியிட்டனர். இவர்களில் ஒருவர் இப்போது தற்காலிக ஜனாதிபதியாகக் கடமையாற்றும் திரு. போஹர் ஜெனரல் டிகோலின் அரசாங்கத்தில் பிரதம மந்திரியாக இருந்த திரு. பொம்பிடோ மற்றொருவர். திரு. போஹருக்கும் திரு. பொம்பிடோவுக்குமிடையில் தான் கடும்போட்டியிருக்குமென்று எதிர்பார்த்தது ஓரளவு சரியானதே. இத்தலையங்கம் எழுதப்படும் வரை கிடைத்த செய்தியில் இருந்து திரு. பொம்பிடோவுக்கு 45 விகித வாக்குகளும் திரு. போஹருக்கு 23 சதவிகித வாக்குகளும் கம்யூனிஸ்ட்கட்சி அபேட்சகருக்கு 20 சதவிகித வாக்குகளும் கிடைத்திருக்கின்றன. இதர நான்கு அபேட்சகர்களுக்கும் மிகக் குறைந்த வாக்குகளே கிடைத்துள்

அரசாங்கம் அமைக்க உதவுமாறு திரு. போஹருக்கு வேண்டுகோள் விடுத்தார். இதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இனி இன்னும் பதின்மூன்று தினங்களில் அதாவது இம்மாதம் 15-ம் திகதி திரு. போஹருக்கும் திரு. பொம்பிடோவுக்குமிடையில் தேர்தல் நடைபெறும். இருவரில் ஒருவரை பிரஞ்சு மக்கள் தங்கள் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்வர். இருவருமே பிற்போக்கு வாதிகள் என்று கம்யூனிஸ்ட் கட்சியினர் கூறியிருப்பதுடன் இருவரில் எவரையுமே ஆதரிக்கப்போவதில்லையென்ற கருத்தையும் தெரிவித்துள்ளனர். ஆனாலும் திரு பொம்பிடோ ஜெனரல் டிகோலின் கட்சியைச் சேர்ந்தவராக இருப்பதுடன் ஜெனரல் டிகோலின் கொள்கையைப் பின்பற்றுபவர். டிகோல் பிரிட்டனையும் அமெரிக்காவையும் ஐரோப்பாவில் தலைமைப்பீடத்திலிருக்க அனுமதிக்கவில்லை. பிரிட்டன், அமெரிக்கா ஆகிய வல்லரசுகளின் கெடுபிடி யுத்தப் போக்குக்கு குறுக்கே அவர் நின்றவர். என்றாலும் 'நேட்டோ' எனப்படும் வட அத்லாந்திக் ஒப்பந்த இராணுவக் கூட்டை பலப்படுத்துவதா, பலஹீனப்படுத்துவதா என்பதிலும் ஐரோப்பிய பொதுச்சந்தையில் பிரிட்டன் சேரும் முயற்சிக்குத் தொடர்ந்து தடைசெய்து கொண்டிருப்பாரா என்பன போன்ற விஷயங்களிலும் சோவியத் யூனியனின் நட்புறவு சம்பந்தமாகவும் திரு. பொம்பிடோ எப்படியான போக்கைக் கடைப்பிடிப்பாரென்பதிலும்தான் இடதுசாரிகளின் ஆதரவு கிடைப்பது பெரிதும் தங்கியிருக்கிறது. பிரான்சின் நாணய மதிப்பு சம்பந்தமாகவும் பணவீக்கத்தைச் சரிக்கட்ட அவர் என்ன நடவடிக்கை எடுப்பாரென்பதிலும் திரு பொம்பிடோவின் வெற்றி தங்கியிருக்கிற

அடம்பன் திருவள்ளுவர் விழா

"அமிர்த மருந்தான திருக்குறளை அருந்தும் முறையில் அருந்தவேண்டும்"

— பண்டிதமணி

யாழ்ப்பாணம், செவ்.

"திருக்கேதீஸ்வரம் என்கின்ற தேவாரம் பாடப்பெற்ற திவ்விய க்ஷேத்திரத்தைக்கொண்ட மாந்தையில் தமிழ் வேதமாகிய திருக்குறளை அருளிய திருவள்ளுவதேவரின் இரண்டாயிரம் ஆண்டுவிழா நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியது; மங்களகரமானது.

'தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றலரிது' என்கின்ற அமிர்தத் திருக்குறள், மக்கள் அனைவருக்கும் அருந்துயர் தீர்க்கும் அருமருந்தாம். அந்த அமிர்த மருந்தை, அருந்தும் முறையில் அருந்தி எந்நாளும் இன்பமுற்று யாவரும் இனிது வாழ்வார்களாக."

மாந்தைக் காரியாதிகாரி பிரிவிலுள்ள அடம்பனில் நடைபெறும் திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு விழாவை முன்னிட்டு பண்டிதமணி கணபதிப்பிள்ளை விடுத்துள்ள செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் தமது செய்தியில் பழம்பெருமை வாய்ந்த மாந்தை மக்கள் திருவள்ளுவரின் ஈராயிரம் ஆண்டு விழாவைக் கொண்டாடுவது பெருமகிழ்ச்சிக்கு உரியது என்று தெரிவித்துள்ளார்.

இன்று பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள திருக்குறள் சாதி, மத, இன பேதம் கடந்து முழு மக்களையும் ஈர்ந்திழுக்கும் ஒரு பொதுமறை என்று விழாக் குழுச் செயலாளரான திரு. கே. சி. பேக்மன்ஸ் விடுத்திருக்கும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இலக்கியத்திலே தனித்திறமைபெற்று விளங்கும் திருக்குறள் உலக மக்கள் அனைவருக்குமே சொந்தமான ஒரு நூல் என்று மன்னார் அரசாங்க அதிபர் திரு. ச. கதிர்காமநாதனும், அகிலத்துக்கு அறநெறி போதித்த வள்ளுவப்பெருந்தகைக்கு விழா எடுப்பது தமிழ் மக்கள் கடன் என்று விழாத் தலைவரான மாந்தைக் காரியாதிகாரி திரு மு. சுப்பிரமணியமும், அறம் பொருள் இன்பம் ஆகிய முப்பாலால் உலகத்தார் பலரும் உண்மை கண்டுய்யுமாறு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வழிவகுத்த தெய்வப் புலவர் திருவள்ளுவரே என்று திரு. கு. வி. தம்பித்துரையும் தங்கள் வாழ்த்துச் செய்திகளில் தெரிவித்துள்ளார்கள்.

இன்றைய நிகழ்ச்சிகள்

நேற்று ஆரம்பமான வள்ளுவர் விழா இன்னும் தொடர்ந்து நடைபெறுகின்றது. அடம்பன் கிராம சபைத் திறந்த வெளியரங்கில் நடைபெறும் விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்:

மாலை 4 மணி: திருக்குறள் சுவடி ஊர்வலம். பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் மன்னார் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோன், மாந்தை வடக்கு கிராம சபைத் தலைவர் திரு. ம. சவரி மற்றும் பலரும் சொற்பொழிவாற்றுவார்கள்

வில்லிசை, இன்னிசை ஆகிய கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும்.

(கா. நி)

மூன்று வருடங்களில் 6033 விவாகப் பதிவுகள்

கோட்டை, திங்கள்

விவாகப்பதிவு செய்யாத தம்பதிகளுக்கு விவாகப் பதிவு செய்வது என்ற அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள விவாகப்பதிவற்ற தம்பதிகள் தங்கள் விவாகப்பதிவைச் செய்துகொண்டனர். இத்திட்டம் மன்னார் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வெற்றியளித்துள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் செயற்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை 6033 விவாகப் பதிவுகள் செய்யப்பட்டன. கண்டிப்பகுதியிலேயே ஆகக்கூடிய விவாகப்பதிவுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

பட்டதாரிகள் பிரச்னைதீர்க்க ஐ. நா உதவி

கோட்டை, திங்கள்

10,000 வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரசாங்கம் வேலைவாய்ப்பளிக்க ஐக்கிய நாடுகள் ஸ்தாபனங்கள்சிலவற்றை இலங்கை நாடியுள்ளது. வேலையற்ற பட்டதாரிகள் சம்பந்தமான விடயங்களை ஆராய நியமிக்கப்பட்ட உயர்தர அதிகாரிகளைக்கொண்ட ஒரு குழு பட்டதாரிகளைப் பொறுப்பதிகாரிகளாகப் பயிற்றவேண்டுமெனத் தீர்மானித்துள்ளது.

இதே குழு சர்வதேச அபிவிருத்தி வங்கியின் ஆதரவோடு பட்டதாரிகளுக்கு கைத்தொழில் துறையில் வேலைவாய்ப்பளிக்கத் தீர்மானித்துள்ளது. இதன் பொருட்டு ஏறக்குறைய 35 சிறிய கைத்தொழில்கள் நிறுவப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன.

இப்பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பளிப்பதற்கான திட்டங்களை வகுப்பதற்கு உப குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இத்திட்டக்குழுவின் ஆராய்ச்சிப்படி தேயிலை, றப்பர் தோட்டங்கள், உப ஏற்றுமதிப் பொருட்கள், கைத்தொழில் பொருட்கள் விநியோகஞ்செய்தல் போன்ற பல துறைகளிலுமுள்ள தகுதியான பதவிகளுக்கு பட்டதாரிகளை நியமிக்கலாமா என ஆராயப்பட்டுவருகிறது இதைவிட நிர்வாக அதிகாரிகள், தொடர்பதிகாரிகள் போன்ற பதவிகளைப் பட்டதாரிகளுக்கு வழங்குவது பற்றியும் அரசாங்கம் ஆலோசனைசெய்துவருகிறது

நவீனமயமாகும்

கோட்டை, திங்கள்

கண்டியிலுள்ள அரசாங்க தச்சுத் தொழில் நிலையம் தங்சுத் தொழில் நிலையம் மத்திய மாகாணத்திலுள்ள பாடசாலைகள், அரசாங்க இலாகாக்கள் ஆகிய வற்றுக்குத் தேவையான தளபாடங்களை விநியோகிக்கும் நோக்கத்தோடு மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

சிறுகைத்தொழில் கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கிவரும் இத் தொழில் நிலையம் தளபாடங்களை விரைவாக உற்பத்தி செய்வதற்காக நவீன யந்திர சாதனங்கள் இந்நிலையத்துக்கு வழங்கப்படும். இதனால் கஷ்டமான வேலைகள் பல இந்த யந்திரங்களினால் செய்து முடிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

நவீன மயமாக்கப்படும் இத் தொழில் நிலைய விஸ்தரிப்பு வேலைகள் யாவும் பூர்த்தியானபின்னர் வருடமொன்றுக்கு இங்கு ரூபா 30,00,000 பெறுமானமுள்ள தளபாடங்கள் உற்பத்தி செய்யப் படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிவுபசார விழா

உடுவில், திங்கள்

மானிப்பாய் மெமோரியல் மகாவித்தியாலயத்திலிருந்து இடமாற்றலாகிச் செல்லும் திருமதி இராசமணி கதிரவேலு ஆசிரியைக்கு மேற்படி பாடசாலை ஆசிரிய நல்லுறவு மன்றத்தினர் பிரிவுபசார விழா ஒன்றை நடாத்தினர்.

மன்றத்தலைவர் திரு. ஞானசிகாமணி அன்னப்பா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கல்லூரி அதிபர் திரு. வி. ஜி. சம்பந்தன் கனிஷ்ட பிரிவுத்தலைவர்

குடும்பக் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம் முன்னேறுகிறது!

யமலோக தர்பாரில் சில தினங்களுக்கு முன்பு யமதர்மனுக்கும் சித்திரபுத்திரனுக்குமிடையில் நடந்த சம்பாஷணையை நமது நட்சத்திர நிருபர் ஒட்டுக்கேட்டு எமக்கு றெக்கட்டில் அனுப்பி வைத்திருக்கிறார். அதை 'எடிட்' பண்ணாமல் அப்படியே தருகிறோம்.

'ஹே, சித்திரபுத்திரனாரே! பூவுலகிலேயுள்ள புண்ணிய பூமியாகிய ஈழநாட்டிலே யாழ்ப்பாணம் என்று சொல்லப்படும் பிரதேசத்தைப் பற்றி நீர் பல, வருடங்களாக ரிப்போர்ட் தரவில்லை. அங்கே எவ்வித முன்னேற்றங்கள் நடந்தேறியுள்ளன என்று எடுத்து இயம்புவீராக!'

'அஹோ, கேளும் பிள்ளாய் யமதர்மராஜனே! தாங்கள் குறிப்பிடும் அந்த பூப்பிரதேசம் பல துறைகளிலும் முன்னேற்றமடைந்துவருகிறது. கோயில்களில் திருவிழாக்கள் ஒழுங்காக நடக்கின்றன; ஆனால் கடவுள் வழிபாடுசெய்கிறவர்கள் ஆயிரத்தில் ஒருவர் தான்.'

'பேஷ், பேஷ்! மேலும் சொல்லுவீராக!'

'மேற்படி கோயில்களுக்குள் சில மானிடர் தான் உள்ளே போகிறார்கள் மற்றவர்கள் வெளியே நிற்கிறார்கள். நாகசுரக்காரர் பல்லவி வாசிப்பதில்லை. சினிமாப் பாட்டுத்தான் ஊதுகிறார். திருவிழாக்களில் கூத்தும் கிரமமாக நடைபெறுகிறது'

'நன்று, நன்று! அப்புறம்?'

'ஜனங்கள் நாளுக்குநாள் நிமிடத்துக்கு நிமிடம் பல்கிப் பெருகிவருகிறார்கள். பஸ்களிலும், ரயில்களிலும் நெருக்கமான கூட்டம். மற்றவர்கள் எக்கேடு கெட்டாலும் என்று தாங்கள் மட்டும் சொகுசாக உட்கார்ந்து கொள்வார்கள். சிலர் தூங்குவதுபோலப் பாசாங்கு செய்வார்கள். சைக்கிள் ஓடுபவர்கள் நடந்துபோகிறவர்களை மதிக்காமல் குறுக்கே விடுவார்கள். கார்செலுத்துபவர்கள் கண்ணைமூடிக் கொண்டு செலுத்தி ஆட்களோடு மோதுவர்கள்'

'ஓஹோ! அப்படியானால் உயிர்களும் போவதுண்டா? உம்முடைய டிப்பார்ட்மென்டுக்கு வேலை அதிகமாகுமே;'

'ஆம் பிரபு. அதனால்தான் மேலதிகமாக இரண்டு குமாஸ்தாக்கள் தரும்படி அப்பிளிகேசன் போட்டிருக்கிறேன்.'

'சரி, சரி. மேலும் சொல்லும்.'

துக்கொண்டு ஆஸ்பத்திரிகளில் சாகிறார்கள். சிறு பையன்கள் நைலோன் ஷேர்ட் அணிந்து, வாயில் 'போரேஸ்' புகையை ஊதிக்கொண்டு சைக்கிள்களில் பவனிவர, அதைக் கண்ட மினிஸ்கேட் மங்கையர் அவர்கள்மீது மையல் கொள்ள அடிபிடி சண்டைகள் ஏற்பட்டுச் சிலர் மாண்டுபோகிறார்கள்.'

'சரிதான். உம்முடைய அப்பிளிகேஷனுக்கு ஆதரவு திரட்டுகிறீர் போலிருக்கிறது. ம், அப்புறம்'

'கொலையென்றவுடனே முன்பு அஞ்சிப் பதுங்கியவர்கள் இப்பொழுது அதை ஒரு கலையாகக் கற்றுக்கொண்டார்கள் தகப்பன் மகனையும், மகன் தகப்பனையும், கணவன் மனைவியையும், மனைவி கணவனையும் கொல்வது சர்வசாதாரணமாகப் போய்விட்டது. பத்து வயதுப் பாலகனைப் பதினொரு வயதுப் பாலகன் சிறிதும் கூச்சமில்லாமல் கொன்று இவ்வுலகத்துக்கு அனுப்பி விடுகிறான் உணவு வித்தியாசத்தினாலோ, சினிமா பார்ப்பதனாலோ என்னவோ சிறுவர் சிறுமிகள் முளைப்பதற்கு முன் காதல் முளைத்துவிடுகிறது. காதலில் தோல்வியுற்றவர்கள் பொலிடோலை எடுத்துப் பால் குடிப்பது போலக் குடித்துவிட்டு இங்கு வந்து சேர்ந்துவிடுவார்கள். போதாக்குறைக்கு பெரியவர்கள் அரசாங்கம் கொடுக்கும் நஞ்சு கலந்த சாராயத்தைக் குடித்துவிட்டு, நான் போட்டு வைத்திருக்கும் கணக்கு முடிவதற்கு முன்னமேயே இங்கு வருகிறார்கள். பொலிஸ்காரர்களுக்கும், பொலிஸ் நாய்களுக்கும் வேலை அதிகரித்துக் கொண்டது. மேலும் சொல்லப்போனால்...!'

நாட்டிலும் நகரிலும்

'போதும் போதும், நிறுத்தும் உம்முடைய அப்பிளிகேஷனின்படி மேலதிகமாக இரண்டல்ல மூன்று குமாஸ்தாக்களைத் தருகிறேன். போய்வாரும்.'

—வழிப்போக்கன்

நிரந்தரக்காரியதரிசி வீட்டில் களவு

கோட்டை, திங்கள்

வீடமைப்பு அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு.

திரு. போஹறுக்கு 23 சத விகித வாக்குகளும் கம்யூனிஸ்ட்கட்சி அபேட்சகருக்கு 20 சதவிகித வாக்குகளும் கிடைத்திருக்கின்றன. இதர நான்கு அபேட்சகர்களுக்கும் மிகக் குறைந்த வாக்குகளே கிடைத்துள்ளன. வாக்களிப்புத் தினம் நெருங்கிக்கொண்டிருந்த சமயத்தில் தமக்கும் திரு. போஹறுக்குமிடையில் தான் போட்டியிருக்கிறதென்பதை, அறிந்துகொண்ட திரு. பொம்பிடோ போட்டியிலிருந்து விலகி ஸ்திரமான

களின் ஆதரவு கிடைப்பது பெரிதும் தங்கியிருக்கிறது. பிரான்சின் நாணய மதிப்பு சம்பந்தமாகவும் பணவீக்கத்தைச் சரிக்கட்ட அவர் என்ன நடவடிக்கை எடுப்பாரென்பதிலும் திரு பொம்பிடோவின் வெற்றி தங்கியிருக்கிறதென்றும் சொல்லலாம்.

எப்படிப்பார்த்தாலும் திரு. பொம்பிடோவின் வெற்றி பெரும்பாலும் நிச்சயமென்றும் அவரது வெற்றியில் தான் பிரான்சின் ஸ்திரமான ஆட்சி தங்கியிருக்கிறதென்றும் சொல்லலாம்.

ஆசிரியருக்குக் கடிதம்

சமரசமாகத் தீர்ப்பதற்கு ஒரு வழி

வடபகுதியிலுள்ள மூன்று பௌத்த பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்றுவிட்டது. கல்வி அமைச்சர் 'சிங்களத்தைப் போதனு மொழியாக்க மாட்டோம்' எனக் கூறியுள்ளார். ஆனல் பெற்றோர்கள் சிங்களத்தைத்தான் போதனுமொழியாக்கவேண்டுமென்று தனித்தனியாக, நேரடியாகக் கேட்டுக்கொண்டால் இது பற்றிப் பரிசீலனை செய்யப்படுமென்றும் கூறியுள்ளார்.

இந்நிலையில் இதனைச் சமரசமாகத் தீர்க்கவேண்டுமாயின், வடபகுதியிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் அரசாங்கம் அனுப்பும் சிங்களம் கற்பிக்கும் ஆசிரியர்களைப் பகிஷ்கரிக்காமல இருப்பதே ஒரு வழியாகும். அரசியலில ஈடுபாடு கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் அரசாங்க மொழியைத் தெரிந்திருப்பது மிகவும் அவசியமாகும். பெரும்பான்மையோருடன் சிறுபான்மையோர் ஒத்துழைத்தாற்ருன் உரிமைகளையும் நியாயமான கோரிக்கைகளையும் பெற முடியும். எதிர்த்துப்போராடிப் பெறநினைப்பது விவேகமலல.

அண்மையில 37 நெசவாசிரியர்களைச் சிங்களத்தில தேர்ச்சிபெருத காரணத்தால வேலைநீக்கம் செய்யும்படி உத்தரவுகொடுக்கப்பட்டது. அப்பொழுது சிங்களம் கற்கக்கூடாது, சிங்களம் கற்பிக்கும் ஆசிரியர்கள் வடபகுதிக்கு அனுப்பப்பட்டால பகிஷ்கரிப்போம்' என்று சொன்னவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் 27நெசவு ஆசிரியர்களினதும் வேலைநீக்கம் ஒரு வருடம் பின்போடப்பட்டது யாவரும் அறிந்ததே. இன்னும் ஏழுவருட காலத்திற்குள் அவர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெற்ருல்தான் தொடர்ந்து உத்தியோகத்தில் இருக்க முடியும்.

வடபகுதியிலுள்ள சகல பாடசாலைகளிலும் எமது தமிழ் பிள்ளைகள் சிங்களம் கற்பதற்கு அரசாங்கம் செய்து தரும்வசதிகளை ஏற்றுக் கொள்வதே இன்றைய நிலையில் சிறந்ததாகும். எமது பிற்சந்ததியினருக்கும்நாம் நன்மை செய்தவர்களாவோம். இதனை நாம் ஏற்றுக் கொண்டால் வடபகுதியிலுள்ள எந்த ஒரு பாடசாலையிலாவது சிங்களத்தைப் போதனுமொழியாக்க வேண்டிய அவசியம் இருக்காது: அத்துடன் இப்பிரச்னைக்கும் இது ஓர் முற்றுப்புள்ளியாகிவிடும்,

எஸ். எஸ். சர்மா
கோப்பாய்

இன்று

யாழ். கதிரேசன் கோவிலில் இன்று பகல் அபிஷேக ஆராதனைகளும் மாலை 7-30 மணியளவில் கதிர்வேலாயுத சுவாமி பூந்தொட்டியுடன் அமைந்த வெள்ளி மயில் வாகனத்தில் வீதி வலம் வரும் காட்சியும் நிகழும். விசேட மேளக் கச்சேரியும் இடம்பெறும்.

தடுப்பு மருந்து

காங்கேசன்துறை, திங்கள்

காங்கேசன்துறைப் பகுதியில் மலேரியா தடுப்பு இயக்கத்தினர் மலேரியா தடுப்பு மருந்து தெளித்துவருகின்றனர்.

இப்பத்திரிகை, ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம்ஆண்டு ஜூன் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விவாகப்பதிவைச் செய்து கொண்டனர். இத்திட்டம் மன்னர் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வெற்றியளித்துள்ளதாக சம்பந்தப்

கண்டிப்பகுதியிலேயே ஆகக் கூடிய விவாகப்பதிவுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தாரிகளுக்கு வழங்குவது பற்றியும் அரசாங்கம் ஆலோசனைசெய்துவருகிறது

குடும்பக் கட்டுப்பாடு ஆராய்ச்சி நிலையம்

கொழும்பில் விரைவில் நிறுவப்படும்

கொழும்பு, ஞாயிறு

குடும்பக்கட்டுப்பாடு முறைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்யவும், நடைமுறையிலுள்ள திட்டங்களின் வெற்றி, தோல்விகள் பற்றிய புள்ளி விபரங்களைச் சேர்க்கவுமாக, குடும்பக் கட்டுப்பாடு ஆராய்ச்சி நிலையம் ஒன்று விரைவில் கொழும்பில் நிறுவப்படவிருக்கிறது.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பொறுப்பினை, பல்கலைக்கழகம், திட்ட இலாகா ஏனைய ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட உபகுழுவொன்று ஏற்றுக் கொள்ளும்.

தோட்டப்பகுதிகளில் இன்னமும் குடும்பக்கட்டுப்பாடு முறைகளைப்பற்றி போதிய அறிவுபெருமலிருப்பதால். தோட்டப்பகுதி மக்களுக்கு குடும்பக்கட்டுப்பாட்டின்முக்கிய த்துவத்தை எடுத்துக்கூற தமிழிலும், சிங்களத்திலும் ஏராளமான துண்டுப் பிரசுரங்கள் அடித்து வெளியிடத்திட்டமிடப்பட்டுள்ளது.

'யாழ்ப்பாணப் பகுதியில் 'லூப்' முறை யிலான குடும்பக் கட்டுப்பாடு திட்டம் பெரும் வெற்றியளித்துள்ளது என்றும், நாட்டின் ஏனையபகுதிகளைப் போலவே யாழ்ப்பாணத்திலும் பிறப்பு விகிதம் ஓரளவு குறைந்துள்ளது'' என்றும் குடும்பக்கட்டுப்பாடு நிலைய அதிகாரி ஒருவர் 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தார்.

சைவக்கட்டுப்பாடுகள் தகர்ந்தால் நாஸ்திகம் நிலைபெறுமாம்

அளவெட்டி, திங்கள்

இறைவனுல் ஆக்கப்பட்ட எமதுசமயம்அகச்சமயம்,புறச்சமயம், அகப்புறச்சமயம் என்ற மூன்று பிரிவாக்கப்பட்டிருப்பதால்தான், புறச்சமயத்தவர் போல மறுசமயங்களை ஒருபோதும் நிந்திப்பதில்லை.

முற்காலத்தில் அரசர்கள் சைவத்தைக் காத்துவந்தனர். அந்நிய அரசுகளின் கீழ் சைவம் சீர்குலைந்த போது யாழ்ப்பாணத்தில் ஆறுமுகநாவலர் தோன்றி சைவத்தை பேணிப் பாதுகாத்தார்'. கீரிமலைச் சிவன் கோவில் மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கை சைவ அனுட்டான பாதுகாப்புச்சபை 2-வது ஆண்டு மகாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசிய சபைத் தலைவர் திரு. த. சிவலிங்கம் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:-

எம்மிடையேயுள்ள ஒருஅரசியல்கட்சியினர்தீண்டாமை ஒழிப்பு சட்டத்தை பார்லிமெண்டில் கொண்டுவந்து நிறைவேற்றினர்கள். இதனுல் இன்று வைதிகச்சைவர் வாழமுடியாத இக்கட்டான நிலை உருவாகியுள்ளது உலகில் உள்ள எல்லாச் சமயங்களையும்பாதுகாக்க அரசு இருந்தபோதும் ஒருகாலத்தில் உலகம் முழுவதும் பரந்திருந்த சைவத்தைக்காக்க ஒரு அரசு இப்போது இல்லாதது வருந்தத்தக்கது. இப்பேர்ப்பட்ட ஓர் சைவ அரசு உருவாகினுல் தான் சைவம் ஒளிபெறும்.

எமது சபை பிரதமருக்கும் மற்றும் மந்திரிகளுக்கும் சைவ மக்கள் சம்பந்தமான விஷயங்கள் பற்றி மகஜர் அனுப்பி இருந்தது. எமக்குப் பதில் அளித்து தமது உயர்ந்தபண்பாட்டை உள்ளூர் ஆட்சி அமைச்சர் தான் காட்டியுள்ளார். பிரதமரோ மற்றும் மந்திரிகளோ இதை அலட்சியம் செய்ததிலிருந்து தேசிய அரசு ஒரே இனம், ஒரே சமயம், ஒரே மொழிக்காகத்தான் அரசாங்கம் அமைத்ததோ என நினைக்கக்கூடியதாக இருக்கிறது.

வைதிகச் சைவரும் உலகில் வாழவேண்டும் என அரசாங்கம்நினைத்திருந்தால் நாங்கள் தீண்டாமைச் சட்டத்தில் இருந்து திருத்தம் செய்யும்படி கோரியபோது அதைச் செய்திருக்கும். மறு சமயங்களில் இருக்கும் பிரிவுகளை ஒன்றுபடுத்த முயலாத அசாங்கம் எமது சமயத்தில் புகுந்து ஒரு பிரிவினரை அழிக்க முயல்வது ஏன்? சைவக்கட்டுப்பாடுகள் தகர்க்கப்பட்டால் இறுதியில் நாஸ்திகம் தான் நிலைபெறும். இதைத்தான், நவீன சைவரும், அரசாங்கமும் விரும்புகின்றனர். குருமாரிலும் நவீன குருமார், வைதிக குருமார் என பிரியவேண்டிய காலம் வந்துவிட்டது. இந்த நேரத்தில் நவீன சைவத்தினர் ஆலயத்தில் கடமையாற்றும் குருமாரை வைதிகர், கோவில்களுக்குள் அனுமதிக்கக் கூடாது.

மனிதனின் வாழ்க்கையை நல்வழிப்படுத்தும் முக்கிய ஸ்தானங்கள் வீடு, பாடசாலை, கோவில் ஆகியன என்றும் வீடுகளில் முன்னே தாம் நல்லொழுக்கம் உடையவராவும் பிள்ளைகள் தமது முறைகளைப் பின்பற்றக்கூடிய வராகவும் வளர்த்தனரென்றும், இதனுல் துன்பமின்றி வீடுகளில் இன்பம் பொங்கியதென்றும், கலப்புக் கல்வியால் மாணவ உலகில் ஒழுக்கமின்மை நிலவுவதால், இம்முறையை ஒழிக்கவேண்டுமென்றும், சினிமாப்படங்கள் ஒழுக்கத்தைப் போதிக்கும் வகையில் பிடிக்கப்படவேண்டுமென்றும், தியேட்டர்களில் நள்ளிரவுக்காட்சிகள் நிறுத்தப்படவேண்டுமென்றும் திரு. சிவலிங்கம் சொன்னர்.

றத்தினர் பிரிவுபசார விழா ஒன்றை நடாத்தினர்.

மன்றத்தலைவர் திரு.ஞானசிகாமணி அன்னப்பா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கல்லூரி அதிபர் திரு. வி. ஜி. சம்பந்தன் கனிஷ்ட பிரிவுத்தலைவர் திரு. எஸ். எஸ். ஐயர், திரு. எஸ். சின்னத்துரை ஆகியோர் திருமதி இராசமணியின்சேவையைப்பாராட்டிப் பேசினர்.

ஆசைப்பிள்ளை சூசைப்பிள்ளை ஆகியது

மட்டுவில், திங்கள்

சண்முகம் ஆசைப்பிள்ளை மகள் சியமளாவிற்கான பிறப்புச் சான்றிதழ் வழங்கும்படி, யாழ்ப்பாணம் கச்சேரிக்கு மனுச் செய்தவருக்கு, சூசைப்பிள்ளை மகள் சியமலாவின் பிறப்புச் சான்றிதழ் கிடைத்துள்ளது.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த சண்முகம் ஆசைப்பிள்ளை என்பவர் தனது மகள் சியமளாவின் பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்கு விண்ணப்பித்திருந்தார். அவரது விண்ணப்பத்துக்குக் கிடைத்த பிறப்புச்சாட்சிப் பத்திரத்தில் சூசைப்பிள்ளை மகள் சியமலா என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தந்தையின் பெயர் மாறிப்பதியப்பட்டு விட்டதாக தந்தை தெரிவித்தார்.

''சிங்கள ஆசிரியர்களை அனுப்புக''

யாழ்ப்பாணம், செவ்

''சகல முஸ்லிம் பாடசாலைகளிலும் சிங்களத்தை ஒரு பாடமாகக் கற்பிப்பதற்குச் சிங்கள ஆசிரியர்களை அரசாங்கம் அனுப்பவேண்டும்'' என்று கோரி மீலாத்விழாக் கூட்டமொன்றில் யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர் ஜனுப் எம். ஏ. ஸி. எஸ். ஏ. காதர் கொண்டு வந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தின் பிரதிகள் கல்வியமைச்சர், பிரதம மந்திரி ஆகியோருக்கும் அனுப்பி வைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தவறு

கடந்த மாதம் 31-ம் திகதி வெளியான 'ஈழநாடு' பத்திரிகையில் உடுப்பிட்டி கொலை முயற்சி வழக்கு என்பதற்குப் பதிலாக உடுபிட்டி கொலை வழக்கு என்று தவறுதலாகப் பிரிகரித்தற்காக வருந்துகிறோம்.

மென்டுக்கு வேலை அதிகமாகுமே;'

'ஆம் பிரபு. அதனுல்தான் மேலதிகமாக இரண்டு குமாஸ்தாக்கள் தரும்படி அப்பிளிகேசன் போட்டிருக்கிறேன்.'

'சரி, சரி. மேலும் சொல்லும்.'

'முன்பெல்லாம் பனங்காயும், ஒடியல் பிட்டும், கூழும், கிழங்கும் சாப்பிட்டவர்கள் இப்பொழுது பாணும், பச்சரிசியும் சாப்பிட்டு வயிற்றைக் கெடுத்

உள்ளம் ..

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

தியேட்டரை அடைந்து, கஸ்தூரியார்வீதி, பெரியகடைச் சந்தியை அடைதல்.

அங்கிருந்து வலப்பக்கமாகத்திரும்பி, கஸ்தூரியார் வீதிவழியாக கன்னுதிட்டி, செல்லம்ஸ் ஸ்ருடியோ சந்தியை அடைந்து, இடப்பக்கமாகத் திரும்பி வண்ணை சிவன் கோவிலை அடைதல்.

அங்கிருந்துதெற்குநோக்கி காங்கேசன்துறைவீதி வழியாக பெரியகடை, சத்திரத்துச்சந்தி, பெரியதபால் கந்தோர் வழியாக ஊர்வலம் நண்பகல் பன்னிரண்டு மணிக்கு கோட்டை மைதானத்தை வந்தடையும்.

(கா. நி.)

எட்டு வயது.... ..

(1-ம் பககத் தொடர்ச்சி)

தப் பட்ட ஊசியைப்போடாமல் அதற்குப் பதிலாக ஏற்பு ஊசியை போட முயன்றதாகவும், சிறுமியுடன் சென்றவர் இதைத்தடுத்த போது அவரைத் தகாத வார்த்தைகளால பேசியதாகவும் வைத்திய சுப்ரீண்டனிடம் புகள் செய்யப் பட்டது.

வைத்திய சுப்ரீண்டன் டாக்டர் ரி. சண்முகநாதனுல் உடனடியாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து குறிப்பிட்ட மாணவ ஆண் தாதி வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்திலிருந்து நேற்றுக் காலையே இடமாற்றம் செய்யப் பட்டார் மற்றேரு ஆண் தாதியும் இப் புகாரின் மீது நேற்றே இடமாற்றம் செய்யப் பட்டார்.

வெளி நோயாளர் சிகிச்சை நிலையத்தில் கடமையாற்றும் பிரதம பெண் தாதி ஒருவரும் வைத்திய சுப்பிரீண்டனின் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுஎச்சரிக்கை செய்யப் பட்டார். விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது.

போய்வாரும்.'

—வழிப்போக்கன்

நிரந்தரக்காரியதரிசி வீட்டில் களவு

கோட்டை, திங்கள்

வீடமைப்பு அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. டபிள்யூ. டி. வி. மகிந்தலயின் வீட்டிலிருந்து ரூபா 20 315 பெறுமதியான தங்கநகைகள் களவுபோய் விட்டதாக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

கான்ஸ்டபிளுக்கு விண்ணப்பங்கள்

காங்கேசன்துறை, திங்கள்

இலங்கை பொலிஸ் சேவையில், பொலிஸ் கான்ஸ்டபிள்களாகச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான முடிவு திகதி ஜூலை மாதம் 1-ம் திகதியாகும்.

உதவி பொலிஸ் சுப்பிரின்டன் பதவிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மருத்துவமாது இல்லையா

புலோலி, வெள்ளி

குடத்தனை, அம்பன், நாகர் கோயில் ஆகிய கிராமங்களில் மருத்துவ மாது இல்லாது பொதுமக்கள் அவதிப்படுகின்றனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழும் இப்பகுதியில் சிறந்த போக்கு வரத்து வசதியுமில்லை. இதனுல் நிறைமாத கர்பினிகள். அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு நடந்து சென்று சிகிச்சை பெற வேண்டி ஏற்பட்டுள்ளது.

இங்கிருந்துகார் ஏற்றுமதி

கோட்டை, திங்கள்

இலங்கையிலிருந்து முதல் முறையாக கார் ஏற்றுமதி செய்யப்படவிருக்கிறது.

இங்கு தயாரிக்கப்படும் மூன்று கார்கள் மத்தியகிழக்கிலுள்ள குவாய்த்துக்கு வரும் வெள்ளிக்கிழமை ஏற்றுமதியாகிறது.

பிரிவுபசாரம்

சுழிபுரம், ஞாயிறு

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாக கடமையாற்றி இளைப்பாறும் திரு. எஸ். செல்லத்துரைக்கு வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்களால் நேற்று பிரிவுபசாரம்க்அளிகப்பட்டது.'